
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

செப்டம்பர் - 2005
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00




# இயற்கையை உறிஞ்சும் ஏகாதிபத்தியம்!

படிப்பகம்



# பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல...
# மனிதன்தான் பூமிக்குச் சொந்தம்!

**கி.பி. 1851-இல் ஃபிராங்க்ளின் பியர்ஸ் என்ற அமெரிக்க அதிபர், சுக்வாமிஷ் என்ற செவ்விந்திய இன மக்களுக்குச் சொந்தமான 20 லட்சம் ஏக்கர் நிலத்தை விலைக்குக் கேட்டார். அதற்குப் பதிலளித்து அந்தக் குழுவின் தலைவர் சியாட்டில், அமெரிக்க அதிபருக்கு எழுதியதாகக் கூறப்படும் பிரபலமான கடிதம் இது. ஐரோப்பாவில் கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை முதலாளித்துவத்தை உலுக்கிக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில், முதலாளித்துவத்தைச் சகிக்க வொண்ணாத பண்டைப் பொதுவுடைமையின் குரலாய் இது ஒலிக்கிறது. அறிவியல் பூர்வமான பொதுவுடைமை, முதலாளித்துவத்திற்கு சாவுமணி அடிக்கத் தொடங்கிய அதே வேளையில், மனித குலத்தின் மழலை முதலாளித்துவத்தின் முகத்தில் காறி உமிழ்கிறது. உலக முதலாளித்துவத்தின் முகத்தில் அந்த எச்சில் இன்னும் வழிந்து கொண்டிருக்கிறது.**

நிலத்துக்கு வெதுவெதுப்பூட்டும் வானத்தை நீ எப்படி விலைக்கு வாங்க முடியும்? எப்படி விற்க முடியும்? நல்ல வேடிக்கை. காற்றின் தூய்மையும், தண்ணீரின் ஒளியும், எங்களுடைய தனிச்சொத்துகளல்ல; பிறகு அவற்றை எப்படி நீ வாங்க முடியும்?

பூமியின் ஒவ்வொரு துகளும் எங்களின் மக்களுக்குப் புனிதமானது.

பளபளக்கும் ஊசி இலைகளும், மணல் பரந்த கடற்கரைகளும், இருண்ட காடுகளுக்குள்ளே பரவிய பனியும், காடு திருத்திய நிலங்களும், ரீங்கரிக்கும் பூச்சி இனங்களும் எங்கள் மக்களின் நினைவுகள் வழியாகப் புனிதமாக நிலைத்திருக்கின்றன. மரங்களுக்குள்ளே செல்லும் நடுத்தண்டு சிவப்பு இந்தியனின் நினைவுகளை பல தலைமுறைகளாகத் தாங்கி வருகிறது.

நாம் பூமியின் அங்கம்; பூமியும் நம்மில் ஓர் அங்கம்.

எனவேதான், வாஷிங்டனிலிருந்து அதன் தலைவர் எங்கள் 'நிலத்தை வாங்கப் போவதாக'ச் சொல்லி அனுப்பியபோது எங்களை அவர் அதிகம் விலை கொடுத்து வாங்கிவிட நினைப்பதாகவே தோன்றியது; நிலங்களை வாங்கிய பிறகும் நமக்கென்று ஓரிடத்தை ஒதுக்கிக் கொடுப்பதாகவும், அங்கே நாம் எந்த ஒரு பிரச்சினையும் இல்லாமல் வாழ்ந்து கொள்ளலாம் என்றும் சொல்லி அனுப்பினார் அவர்.

நமக்கு அவர் தந்தை போல ஆகிவிடுவார்; நாம் அவருக்குக் குழந்தைகளாகி விடுவோம்; அதனாலேயே நம் நிலங்களை அவர் வாங்க அனுமதித்துக் கொள்வோமாம்.

ஆனால், அது அப்படி எளிதாக முடிகிற விசயமல்ல; காரணம், எங்களுக்கு எங்கள் நிலங்கள் புனிதமானவை.

அருவிகளிலும் ஆறுகளிலும் ஓடுகிற தூய்மையான தண்ணீர் வெறும் நீரல்ல, அவை எங்களது மூதாதையரின் ரத்தம்.

உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்கிறோம் என்றால், அது முதலில் புனிதமானதென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; அதேபோல உங்கள் குழந்தைகளுக்கும் இந்த நிலம் புனிதமானதென்பதை நீங்கள் கற்றுக் கொடுங்கள். படிகம் போன்ற ஏரிகளின் தெளிந்த நீரில் தெரியும் பிம்பங்கள் எங்களது மக்களின் வாழ்வில் நடந்த பலவிதமான சம்பவங்களையும் நினைவுகளையும் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

ஓடுகின்ற நீரில் நீங்கள் கேட்கும் முணுமுணுப்பு எங்கள் பாட்டனின் குரல்.

வெள்ளைக்காரன் இருக்கிறானே, அவனுக்கு எங்களின் பழக்கவழக்கங்கள் தெரியாது. எங்கள் நிலத்தின் எல்லாப் பகுதிகளுமே அவனைப் பொறுத்த அளவில் ஒன்றுதான். இரவிலே திருடன் போல உள்ளே நுழைந்து தான் ஆசைப்பட்ட பொருளையெல்லாம் சூறையாடிக் கொண்டு போவதுதான் அவன் பழக்கம்.

கல்லறையில் தந்தையைப் புதைப்பான், மறுகணம் மறந்து போவான், அவனுக்குக் கவலையில்லை. பிள்ளைகளிடமிருந்தே கூட நிலத்தைப் பறித்துக் கொள்வான், அவர்களின் எதிர்காலம் பற்றி அவனுக்கு அக்கறையில்லை.

தந்தையின் ஆன்மா இருந்த கல்லறை, சந்ததியின் உரிமை இரண்டையுமே அவன் வெகு சுலபமாக மறந்து போகிறான். தாயாகிய பூமியை, சகோதரனாகிய வானத்தை, ஆடுமாடுகளைப் போல பொன்மணிகளைப் போல விற்கக்கூடிய வாங்கக்கூடிய கொள்ளையடிக்கக் கூடிய பொருள்களாக மட்டுமே அவன் பார்க்கிறான்.

பச்சைப் பூமியை எடுத்து விழுங்கி எல்லாவற்றையுமே வறண்ட பாலைவனமாக்கி விடுகிற அகோரப்பசி அவனுக்கு.

எப்படிப் பார்த்தாலும், எங்கள் பாதைகள் வேறு, உனது பாதைகள் வேறுதான். எங்களுக்கு உங்கள் நகரங்களைப் பார்க்கும் போதே எரிகிறது, வேதனை வாட்டி எடுக்கிறது. காட்டுமிராண்டிகளுக்கு நகரங்களை விளங்கிக் கொள்ள முடியாதென்கிறாய்.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● புதிய கலாச்சாரம்

● மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

● போர்: 23
● குரல்: 4
● மே-செப். 2005

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

சந்தா படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகே,
அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 5 மணி வரை

உள் ஓவியங்கள்:
முகிலன்

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# இந்தத் தாகம் ரொம்பப் பெரிசு!

"**கொ**க்கோ கோலாவிற்கு எதிராக நக்சலைட்டுகள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அவர்களை எங்கே கண்டாலும் பிடித்துப் போலீசிடம் ஒப்படைக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்'' - ஆகஸ்டு 25-ம் தேதியன்று காலை முதல் நெல்லை பேருந்து நிலைய வாயிலில் ஒலிபெருக்கியின் மூலம் நெல்லை நகரப் போலீசு வெளியிட்ட அறிவிப்பு இது. நெல்லை - கங்கை கொண்டான் கோக் ஆலைக்கு எதிராக செப். 12-ஆம் தேதி நடைபெறவிருக்கும் எமது போராட்டத்திற்கும், அதனையொட்டித் தமிழகமெங்கும் நாங்கள் மேற்கொண்டு வரும் பிரச்சாரத்திற்கும் போலீசு அளித்துள்ள எதிர்வினை இது. இந்த அறிவிப்பைக் கண்டஞ்சி எமது தோழர்கள் பிரச்சாரத்தை நிறுத்தவுமில்லை; மக்கள் யாரையும் போலீசிடம் பிடித்துக் கொடுக்கவுமில்லை. இருப்பினும் இந்த அறிவிப்பு மிகுந்த பொருட்செறிவுள்ளது.

விக்ரம், விஜய் போன்றோரடங்கிய தனது விளம்பரக் கூலிப்பட்டாளத்துடன் உயர் போலீசு அதிகாரிகளையும் கொக்கோ கோலா நிறுவனம் சம்பளத்திற்கு அமர்த்தியிருக்கிறது என்பது இந்த அறிவிப்பின் மறைபொருள். ''கருத்துரிமை - ஜனநாயக உரிமை'' போன்ற மாய்மாலங்களெல்லாம் அ.தி.மு.க. - தி.மு.க. லாவணிக் கச்சேரிக்காரர்களுக்குத்தானே ஒழிய அமெரிக்காவை எதிர்க்கும் புரட்சிக்காரர்களுக்கல்ல என்பது இதன் நேர்ப்பொருள். மறுகாலனியாக்கம் என்பது வெறும் பொருளாதாரச் சுரண்டல் அல்ல, அது பன்னாட்டு முதலாளிகளால் திணிக்கப்படும் பாசிசம் என்பது இந்த அறிவிப்பின் உள்ளே உறைந்திருக்கும் அரசியல் கருப்பொருள். தண்ணீர் தனியார்மயத்திற்கு எதிராகவும் கோக்கிற்கு எதிராகவும் தமிழகம் தழுவிய அளவில் விரிவாகவும் வீச்சாகவும் நாங்கள் மேற்கொண்டு வரும் இயக்கம், எதிரிகளிடம் தோற்றுவித்திருக்கும் அச்சத்திற்கு இது ஒரு விளைபொருள்.

கோக்கின் ஆக்கிரமிப்பையும், தண்ணீர் தனியார்மயம் என்ற சதியின் உண்மை முகத்தையும், மறுகாலனியாக்க அபாயத்தையும் அம்பலப்படுத்தி தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் முழங்கும் எமது ஆயிரக்கணக்கான சுவர் விளம்பரங்கள், லட்சக்கணக்கான துண்டறிக்கைகள், 60,000 வெளியீடுகள், நூற்றுக்கணக்கான தெருமுனைக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், வீதி நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், ஓவியக் காட்சிகள், அனைத்துக்கும் மேலாக தமிழகத்தின் பேருந்துகள் கடைவீதிகள் குடியிருப்புப் பகுதிகள் எங்கும் கடந்த 3 மாதங்களாக ஓயாமல் ஒலித்துக் கொண்டேயிருக்கும் எமது தோழர்களின் குரல் எமது பிரச்சாரம் மக்களிடம் பெற்று வரும் வரவேற்பு - இவையனைத்தும் நிதரிசனமான உண்மைகள். ''விளம்பரம் - 99 சரக்கு - 1'' என்ற சதவீதக் கணக்கில் வியாபாரம் நடத்திவரும் இந்தப் பன்னாட்டு நிறுவனம் எமது பிரச்சாரம் கண்டு அஞ்சக் காரணம் - இதன் அரசியல் உள்ளடக்கம். நட்சத்திரங்களைத் தனது விரல் சொடுக்கில் ஆடவிடும் கோக், நட்சத்திரக் கவர்ச்சிகள் ஏதுமற்ற எமது சாதாரணத் தோழர்களை பார்த்து அஞ்சக் காரணம் நட்சத்திரங்கள் வெறும் கூலிகள் - இவர்கள் போராளிகள் என்பதுதான்.

''நக்சல்பாரி சகோதரர்களே, நாடாளுமன்றத்துக்கு வாருங்கள்! தேர்தலில் நின்று பெரும்பான்மை பெற்று தாராளமாக நீங்கள் விரும்பும் கொள்கைகளை அமல்படுத்துங்கள்!'' என்று அங்கே ஆந்திர மாவோயிஸ்டுகளுக்கு அறைகூவல் விடுகிறார் பிரதமர் மன்மோகன் சிங். தேர்தலில் நின்று 'வைகுந்தம் போவது' இருக்கட்டும்; தெருவில் நின்று பிரச்சாரம் செய்யவே தடை விதிக்கிறது போலீசு. நெல்லை தூத்துக்குடி குமரி மாவட்டங்களில் பொதுக் கூட்டம், தெருமுனைக் கூட்டம், வாகனப் பிரச்சாரம் ஆகிய அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆள், அம்பு, சேனை அனைத்தும் தன் பக்கம் இருந்தும் 'கோக்'கிற்கு அச்சம் விடவில்லை போலும்! ஒளியத் தெரியாதவன் தலையாரி வீட்டில் ஒளிந்த கதையாக, ''நக்சலைட்டுகளைப் பிடித்துக் கொடுங்கள்'' என்று போலீசை வைத்து மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

ஆனால் கோக்கிற்கு எதிராகத் திரண்டு வரும் பொதுக்கருத்தை, அந்தக் கருத்திற்குச் செயல் வடிவம் தரவிருக்கும் மக்களை யாரிடம் பிடித்துக் கொடுக்க முடியும்? குடிநீருக்காகவும் பாசன நீருக்காகவும் அன்றாடம் அல்லல்படும் மக்கள், எண்ணிறந்த போராட்டங்களை நடத்தி வரும் மக்கள் தங்களது பிரச்சினையின் ஊற்றுமூலத்தை மெல்ல மெல்லப் புரிந்து வருகிறார்கள். ஒரு குடம் தண்ணீருக்காக மக்கள் நடத்தும் போராட்டங்களில் ''ஆறு எங்கள் சொத்து'' என்ற முழக்கம் கிளம்பும். களவு போகும் நிலத்தடி நீருக்கு எதிராக ஆங்காங்கு நடக்கும் போராட்டங்கள், ''நிலத்தடி நீர் எங்கள் சொந்தம்'' என்று முழங்கும். எத்தனைக் குடங்கள் தண்ணீர் ஊற்றினாலும் அடங்காத அத்தகையதொரு தாகத்தை 'கோக் எதிர்ப்புப் போராட்டம்' மக்களிடம் தோற்றுவிக்கும். கோக் பெப்சியின் மொழியில் சொல்வதானால், ''இந்தத் தாகம் ரொம்பப் பெரிசு''. இது விடுதலைத் தாகம்! ●

படிப்பகம்

www.padippakam.com

# இயற்கையை உறிஞ்சும் ஏகாதிபத்தியம்!

ஆறு, கடல், காடு, மலைகள் அனைத்தையும் தனியார்மயமாக்கக் கோரும் உலக முதலாளி வர்க்கத்தின் கரங்களில் வேதப்புத்தகமாகவும் நீதி நூலாகவும் பயன்பட்டு வருகிறது ஒரு கட்டுரை. 'பொதுச் சொத்தின் அவலம்' (The Tragedy of the commons) என்ற அந்தக் கட்டுரையை எழுதியவர் காரட் ஹார்டின் என்ற கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்.

1968 டிசம்பரில் 'சயின்ஸ்' என்ற அமெரிக்க இதழில் வெளியான அந்தக் கட்டுரை மாபெரும் அறிவியல் ஆய்வாக முதலாளிவர்க்கத்தால் கொண்டாடப்படுகிறது. இதுவரை 600 பதிப்புகள் வெளியாகியுமிருக்கிறது.

ஹார்டின் முன்வைக்கும் 'அறிவியல் பூர்வமான' ஆய்வின் முடிவுகளை கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்:

''இந்த உலகின் வளங்கள் வரம்புக்குட்பட்டவை. எனவே அவற்றை நுகரும் மக்கட்தொகையும் வரம்புக்குட்பட்டதாகவே இருக்க முடியும். ஆனால் ஏழைகள்தான் வகைதொகையின்றி பெற்றுத் தள்ளுகிறார்கள். வேண்டுகோள்களால் இதைக் கட்டுப்படுத்த முடியாது. இதற்குரிய 'தண்டனை' வழங்கப்பட வேண்டும். பொறுப்பற்ற பெற்றோர்களின் பிள்ளைகள் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான் என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

பொதுச் சொத்து என ஒன்று இருப்பதனால் தான் இப்படி உருவாகும் கூட்டம் அதனை நாசமாக்குகிறது. எனவே பொதுச் சொத்துக்களை - ஆறு, கடல், காடு போன்றன - தனியாருக்கு விற்றுவிடலாம்; அல்லது அவற்றைப் பயன்படுத்தும் உரிமை குறிப்பிட்ட அளவு சொத்துள்ளவர்களுக்கு மட்டுமே சாத்தியம் என்ற நிலையை உருவாக்க அவற்றை ஏலம் விடலாம். பொதுச் சொத்தின் அழிவா, தனியார்மயமா என்பதை நாம் உடனே முடிவு செய்தாக வேண்டும்'' என்று கூறுகிறார் ஹார்டின்.

கார்ல் மார்க்ஸ் தன்னுடைய மூலதனத்தில் ஏளனம் செய்து ஒதுக்கிய மால்தஸ் பாதிரியின் மக்கள் தொகைக் கோட்பாடுதான் ஹார்டின் முன் வைக்கும் 'அறிவியல்' ஆய்வின் வழிகாட்டி. எனினும் இதனை 'இன்னொரு அமெரிக்கக் குப்பை' என்று நாம் புறந்தள்ளிவிடவும் முடியாது. இந்தக் 'குப்பை' தான் இன்று உலகவங்கியின் பைபிள். உலக வங்கியின் ஆணைக்கிணங்க மகாராட்டிர அரசு கொண்டு வந்துள்ள 'நீர்வள ஒழுங்குமுறைச் சட்டம்' என்பதே 'ஹார்டின் சட்டம்' தான்.

''மாநிலத்தின் நீர்வளங்கள் அனைத்தையும் நிர்வாகம் செய்யும் அதிகாரத்தை முதலாளிகள் - அதிகாரிகள் - வல்லுனர்கள் அடங்கிய மூவர் குழுவிடம் ஒப்படைப்பது; ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டுக்கு பாசன வரி ரூ. 8000. இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெற்ற விவசாயிகளுக்கு ரூ. 12,000'' என்ற விதிமுறைகளின் பொருள் வேறென்ன?

''எனக்குப் பிள்ளையில்லை; நிலமும் இல்லை. அரசாங்கம் எனக்கு நிலம் தரப்பேகிறதா?'' என்று மகாராட்டிர அரசை நோக்கிக் கேள்வி எழுப்பினார் ஒரு விவசாயி. உடைமைகள் ஏதுமற்ற இந்தப் பாமர விவசாயியின் கேள்வி உலக முதலாளி வர்க்கத்தின் நோக்கத்தை அம்பலமாக்குகிறது. நீர்வளத்தைப் பாதுகாப்பதோ, இயற்கை வளங்களைக் காப்பாற்றுவதோ உலக முதலாளிகளின் நோக்கமல்ல; அவற்றைத் தங்களது தனிச் சொத்தாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களது வேட்கை.

''உங்களுக்கு வேலை கொடுப்பதற்காகத்தான் நான் ஆலை தொடங்குகிறேன்'' என்று தொழிலாளியிடம் கூறும் இந்தப் பரோபகாரிகள், 'இயற்கையைப் பாதுகாக்கும் பொருட்டு'த்தான் அதனைத் தங்கள் சொத்தாக மாற்றிக் கொள்ள விரும்புவதாக நம்மிடம் சொல்கிறார்கள்.

''இது பேராசை அல்ல; இயற்கையைப் பாதுகாப்பதற்கு இதுதான் அறிவியல்பூர்வமான வழி'' என்றும் நமக்கு விளக்கமும் சொல்கிறார்கள்.

''தனக்குச் சொந்தமில்லாத எதையும் ஒரு மனிதன் பாதுகாக்க மாட்டான்; ஏனென்றால் தனிச் சொத்தைச் சேர்ப்பதுதான் மனிதனின் இயல்புணர்ச்சி. எனவே பொதுச் சொத்தான இயற்கையைத் தனிச் சொத்தாக்குவதொன்றுதான் இயற்கையைப் பாதுகாப்பதற்கான வழி'' என்பதே முதலாளி வர்க்க அறிவுத்துறையினரும் பன்னாட்டு நிறுவனங்களும் முன்வைக்கும் வாதங்கள்.

சொத்து சேர்ப்பது மனிதனின் இயல்புணர்ச்சி! பொதுச் சொத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு முதலாளித்





படிப்பகம்

www.padippakam.com

துவம் முன்வைக்கும் 'அறிவியல் பூர்வ மான' இந்தக் காரணத்தைத்தான் பொது வுடைமைக் கொள்கையை எதிர்ப்பதற் கும் முதலாளித்துவம் பயன்படுத்தி வருகிறது. கம்யூனிசத்தை எதிர்ப்பதற் குப் பயன்பட்ட இந்தக் காரணம், இன்று தேசியத்தை எதிர்ப்பதற்கும், உலகின் இயற்கை வளங்களைக் கொள்ளையி டும் முதலாளித்துவ சர்வதேசியத்தை நியாயப்படுத்தவும் ஏகாதிபத்தியங் களால் பயன்படுத்தப் படுகிறது.

பொதுச் சொத்தைச் சூறையாடத் தூண்டும் இதே 'இயல்புணர்ச்சி'தான் கோடிக்கணக்கான சிறு உடைமை யாளர்களின் தனிச் சொத்தைச் சூறை யாடுமாறும் பன்னாட்டு முதலாளிக ளைத் தூண்டுகிறது.

எனவேதான், தண்ணீர் முதல் கடல், காடு, மலை, உயிரணுக்கள், விதைகள் ஈறான அனைத்தையும் தனியார்மய மாக்கும் ஏகாதிபத்திய வெறித்த னத்தை இன்று கம்யூனிஸ்டுகள் மட்டு மின்றி கம்யூனிஸ்டு அல்லாத பலரும் எதிர்த்துப் போராடுமாறு தள்ளப்ப டுகிறார்கள்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற அடிப் படையில் இத்தகைய போராட்டங்கள் வரவேற்கப்பட வேண்டியவையெனி னும் இவர்கள் முன்வைக்கும் மாற்று கள் பலவீனமானவை, முரண்பாடா னவை. முதலாளித்துவ சொத்துடை மையை இவர்கள் ஏற்றுக் கொள்வதால் தற்போதிருக்கும் நிலையைத் தக்க வைப்பது, சிறு தொழில் மற்றும் சிறு உடைமைகளைப் பாதுகாப்பது, மரபுரி மைகளைக் காப்பது என்ற பல கோணங்களிலேயே இந்த மாற்றுகள் முன்வைக்கப்படுகின்றன.

சூழலியம், புவி ஜன நாயகம், மையப்படுத்து தல் எதிர்ப்பு, மரபுக்குத் திரும்புதல் - போன்றவை எவையும் முதலாளித்து வத்தைத் தகர்ப்பது பற் றிப் பேசுவதில்லை.

'சொத்து சேர்ப்பது மனிதனின் இயல்பு' என்று கூறும் முதலாளித் துவத்தை இவர்கள் யாரும் சித்தாந்த ரீதியில் கேள்விக்குள்ளாக்குவ தில்லை. மாறாக, வெவ் வேறு விதிதங்களில் அந் தக் கருத்துடன் உடன்படு கிறார்கள்.

ஆனால், ''சொத்து

**''தனது சொத்தாக இல்லாத எதையும் ஒரு மனிதன் பாதுகாக்கமாட்டான். இது மனித இயல்பு. எனவே இயற்கை வளங்களைத் தனிச்சொத்தாக்குவது ஒன்றுதான் அவற்றைப் பாதுகாப்பதற்குகந்த அறிவியல் பூர்வமான வழி'' என்கிறார்கள் பன்னாட்டு முதலாளிகள்!**

ரிமை மனிதனின் பிரிக்கவொண்ணாத உரிமை'' என்பதை ஏற்றுக் கொண்டு விட்டால் சொத்தை விரிவுபடுத்திக் கொள்ளும் உரிமை, அதாவது அடுத்த வன் சொத்தை அபகரிக்கும் உரிமை யும் மேற்படி பிரிக்கவொண்ணாத உரி மையின் அங்கமாகி விடுகிறது.

எனவே, முதலாளித்துவச் சொத்து டைமையைக் கேள்விக்குள்ளாக்காத வரை, அதன் சமூக விரோதத் தன் மையை அம்பலப்படுத்தாத வரை, இயற்கையையே உடைமையாக்கிக் கொள்ள எத்தனிக்கும் இந்த ஏகாதிபத் தியச் சதியை நாம் முறியடிக்க வியலாது.

•••

அனைவரும் அறிந்த ஒரு உதார ணத்திலிருந்து தொடங்குவோம். நக ராட்சிக் குழாயில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறது. குடம் நிறைந்து தண்ணீர் சாலையில் ஓடுகிறது. ஒரு வழிப்போக்கர் குழாயை மூடிவிட்டுச் செல்கிறார் - அவர் அந்தக் குழாயின் உரிமையாளர் அல்ல.

விளைந்த பயிரை மாடு மேய்ந்து கொண்டிருக்கிறது. அந்த வழியே செல் லும் விவசாயி அதனை விரட்டிவிட்டுச் செல்கிறார் - அவர் அந்த நிலத்தின் உடைமையாளரல்ல.

தண்ணீரின் பயன் மதிப்பையும் தானியத்தின் பயன் மதிப்பையும் அவர்கள் உணர்ந்திருப்பதன் வெளிப் பாடுதான் அவர்களது நடவடிக்கைகள்.

ஒழுகும் குழாயைக் காணும் ஹார்டி னும் பதறுகிறார்; சுமார் எத்தனை லிட் டர் தண்ணீர் வீணாகியிருக்கும் என்று மதிப்பிட்டு அதனை 12 ரூபாயால் பெருக்கிப் பார்க்கிறார். தண்ணீருக்கு முதலாளித்துவம் நிர்ணயித்திருக்கும் சந்தை மதிப்பின்படி சுமார் 1200 ரூபாய் தண்ணீர் வீணாகியிருக்கிறது. ''தனியார்மயம்தான் இதற்குத் தீர்வு'' என்று உடனே குரல் கொடுக்கிறார்.

வழிப்போக்கனின் பார்வையில் அங்கே வீணாகிக் கொண்டிருந்தது பயன் மதிப்புமிக்க தண்ணீர். எனவே தான் அவர் குழாயை மூடுகிறார். ஹார் டினின் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் குழாயை மூடுவதில்லை.

ஏனென்றால் அவர்களைப் பொறுத் தவரை குடத்தில் நிரம்பியிருக்கும் தண் ணீருக்கும் வழிந்து தெருவில் ஓடும் தண்ணீருக்கும் வேறுபாடு இல்லை. ஏனென்றால் அது விலைமதிப்பு நிர்ண யிக்கப்படாத நகராட்சித் தண்ணீர், இல வசக் குடிநீர். சரக்காக மாற்றப்படும் வாய்ப்பில்லாத தண்ணீர், குடத்தில் நிரம்பினாலும் தெருவில் ஓடினாலும் அது அவர்களைப் பொருத்தவரை வீணானதுதான்.



சென்னையில் ஆரணி ஆறு, கொசத்தலை ஆறுகளின் படுகைகள் உலக வங்கி ஆணைப்படி தனியார்மயம் ஆக்கப்படுகின்றன.

மனிதன் உள்ளிட்ட இயற்கை அனைத்தையுமே முதலா ளித்துவம் பண்டமாக வும், உற்பத்திச் சாதனமா கவுமே பார்க்கிறது. எனவே அத்தகைய பண் டம், தான் மட்டும் நுகரக் கூடியதாகவோ, தான் மட் டுமே சுரண்டக்கூடியதா கவோ, தன்னால் விற்கப் படக் கூடியதாகவோ இல் லாதவரையில் எந்த ஒரு பொருளின் பயன் மதிப் பையும் அது பொருட்ப டுத்துவதில்லை.

''தனிச் சொத்து டைமை நம்மை முட்டாள் களாகவும் ஒரு தரப்பான வர்களாகவும் செய்து

www.padippakam.com

விட்டபடியால், ஒரு பொருள் நம்மிடம் இருந்தால்தான் அது நம்முடையதாகிறது'' என்றார் கார்ல் மார்க்ஸ். பொதுச் சொத்துகளையும் இயற்கையையும் வீணாக்கும் பொறுப்பற்ற தன்மை மக்களிடம் நிலவுகிறதென்றால் அதற்கு முழு முதற் காரணம் முதலாளித்துவம் அவர்களிடம் தோற்றுவித்திருக்கும் சிந்தனையும் பண்பாடும்தான்.

முதலாளித்துவத்தால் இன்னமும் தின்று செரிக்கப்படாமல் மக்களிடம் எஞ்சியிருக்கும் மரபுகளும், விழுமியங்களும், பாட்டாளி வர்க்கத்திற்கேயுரிய பொதுமை நாட்டமும்தான் 'நமக்குச் சொந்தமில்லாததையும் நம்முடையதாகக் கருதும்' பண்பாட்டை மக்களிடம் நிலவச் செய்திருக்கின்றன.

முதலாளித்துவமோ தனக்குச் சொந்தமில்லாத எந்தப் பொதுச் சொத்தையும் நாசமாக்குகிறது. பாலாறும், ஒரத்துப்பாளையம் அணையும், கங்கை, யமுனையும் சில எடுத்துக்காட்டுகள். முதலாளிகள் இயற்கையை நேசிக்குமாறு செய்யும்பொருட்டு இயற்கை வளங்களை ஹார்டினின் அறிவுரைப்படி தனியார்மயமாக்கி விடலாம்தான். ஆனால் அவற்றைச் சூறையாடுவதன் வாயிலாகத்தான் முதலாளித்துவம் தன்னுடைய நேசத்தை வெளிப்படுத்திக் கொள்கிறது.

ஆயிரம் ஆண்டுகளாய் சேமிக்கப்பட்ட பிளாச்சிமடாவின் நிலத்தடி நீர் வளத்தை இரண்டே ஆண்டுகளில் கொக்கோ கோலா ஏன் உறிஞ்சித் தீர்க்க வேண்டும்? பல லட்சம் ஆண்டுகளாய் சூரியனின் வெப்பத்தால் உருவாகிச் சேமிக்கப்பட்டிருக்கும் நிலக்கரியையும் எண்ணெய் வளத்தையும் சில பத்தாண்டுகளிலேயே சுரண்டி எடுத்துவிட்டு 'சூரிய ஒளியிலிருந்தே மின்சாரம்', 'புதுப்பிக்கப்படக் கூடிய எரிபொருள்', 'காற்றிலிருந்து மின்சாரம்', 'கடல் நீரிலிருந்து குடிநீர்' என்று எதற்காகத் தவிக்க வேண்டும்?

பிளாச்சிமடாவின் நிலத்தடி நீரையும் வளைகுடாவின் எண்ணெய்க் கிணறுகளையும் வற்றச் செய்தவர்கள் ஏழைகளால் பெற்றுப் போடப்பட்ட மக்கள் கூட்டமல்ல. யாரிடம் இயற்கை வளங்களை ஒப்படைக்க வேண்டு



**உங்களுக்கு...**

கங்கை காவிரி இணைப்பு
மழைநீர் சேகரிப்புத் திட்டம்
கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்
கழிவுநீர் மறுசுழற்சித் திட்டம்

**அவர்களுக்கு**

பாலாறு - பெப்சி
பவானி - கோக்
வைகை - பெப்சி
தாமிரவருணி - கோக்
மதுராந்தகம் ஏரி - பெப்சி
சோழவரம் - கோக்

மென ஹார்டின் சொல்கிறாரோ, அந்தப் பணக்கார வர்க்கத்தின் கார் தாகமும் பெப்சி தாகமும்தான், ஏனைய மக்களைத் தாகத்தில் தள்ளியிருக்கிறது.

இந்தப் பணக்கார வர்க்கத்தின் தாகமும் இயல்பான தேவையிலிருந்து எழுந்ததல்ல; இதுவும் விளம்பரங்களால் உற்பத்தி செய்யப்பட்ட தாகம்; மூலதனத்தின் தாகத்தை, முதலாளி வர்க்கத்தின் லாப வேட்கையைத் தணிப்பதற்காகவே உருவாக்கப்பட்ட தாகம்.

'இந்தத் தாகம் ரொம்பப் பெரிசு' அதனால்தான் பல ஆயிரம் விவசாயிகள், சில நூற்றாண்டுகளாய் விவசாயம் செய்யும் அழியாத நிலத்தடி நீர் வளத்தை, ஒரே ஒரு கம்பெனி இரண்டே ஆண்டுகளில் அழித்து விட்டது.

நாளொன்றுக்கு 5 லட்சம் லிட்டர் என்ற ஒப்பந்தத்தின் வரம்புக்குள் நின்று பத்தாண்டுகளுக்கு உற்பத்தியை விரிவாக்காமல் ஒரே அளவில் வைத்திருப்பதற்கு கோக் நிறுவனம் ஒரு விவசாயி அல்ல; தாமிரவருணியிலிருந்து நாளொன்றுக்கு எவ்வளவு தண்ணீர் எடுக்க வேண்டுமென்பது ஒப்பந்தக் காகிதத்தால் தீர்மானிக்கப்படுவதில்லை. அது அட்லாண்டாவில் உள்ள கோக்கின் தலைமையகத்தால் தீர்மானிக்கப்படுகிறது. 'தண்ணீருக்குப் பதிலாக கோக்' என்பதைத் தனது முழக்கமாக வைத்துள்ள கம்பெனியின் தாகம் தாமிரவருணி ஆற்றையே பாட்டிலில் அடைத்தாலும் அடங்கப் போவதில்லை.

**எனவே, முதலாளித்துவச் சொத்துடைமையைக் கேள்விக்குள்ளாக்காதவரை, அதன் சமூக விரோதத் தன்மையை அம்பலப்படுத்தாத வரை, இயற்கையையே உடைமையாக்கிக் கொள்ள எத்தனிக்கும் இந்த ஏகாதிபத்தியச் சதியை நாம் முறியடிக்கவியலாது.**

இயற்கையை ஓம்பும் விதத்திலோ, இயற்கை தன்னைப் புனரமைத்துக் கொள்ளும் வேகத்தைக் கணக்கில் கொண்டோ முதலாளித்துவச் சுரண்டலின் வேகம் தீர்மானிக்கப்படுவதில்லை. இலாபம் மட்டுமே அதன் உந்து சக்தி. எனவே இயற்கை வளங்களையும் மனித வளத்தையும் சுரண்டுவதில் முதலாளித்துவம் காட்டும் வரைமுறையற்ற வெறி என்பது அதன் இயல்பான பண்பு.

குடகு மலையின் காடுகளை அழித்து பல்லாயிரம் ஏக்கர் காப்பித் தோட்டம்! மழை பொய்த்தது, காவிரி வறண்டது, விவசாயம் அழிந்தது. திக்கற்றவர்களாக திருப்பூருக்கு ஓடிவரும் விவசாயிகளை 12 மணிநேரம், 15 மணிநேரம் என்று வேலை வாங்கி அவர்களையும் 40 வயதுக்குள் முடமாக்கி, மனிதக் கழிவுகளாக்கி வெளியேற்றுகிறது முதலாளித்துவம்.

இயற்கையின் ஆதாரப் பொருளான தண்ணீரை நஞ்சாக்குவதைப் போலவே, இயற்கையின் அதி உன்னதப் படைப்பான மனிதனையும் அது நஞ்சாக்குகிறது. மண்ணுக்கும் மனிதனுக்கும், நீர் வளத்துக்கும் மனித வளத்துக்குமிடையே முதலாளித்துவம் பாரபட்சம் காட்டுவதில்லை. பொரி பொரியாய்த் தெறித்து ஈரப்பசை ஒட்ட மறுக்கும் பாலாற்றின் படுகைக்கும், சொறியும் சிரங்கும் வந்து தோல் வறண்டு போன அந்தப் பகுதி மக்களின் தோலுக்கும் என்ன வேறுபாடு? ஒரத்துப்பாளையம் கழிவுநீருக்கும் சிறுமி செல்வராணியின் கொப்புளங்களிலிருந்து வழியும் சீழுக்கும் என்ன வேறுபாடு?


படிப்பகம்

www.padippakam.com

''சமூகத்தைப் போலவே இயற்கை சம்பந்தமாகவும் கூட இக்காலத்தில் (முதலாளித்துவ) உற்பத்தி முறை உடனடியான விளைவுகளைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டுள்ளது. பிறகு இந்த நோக்கத்தின் பால் திசைமுகம் திரும்பியுள்ள செயல்களின் எதிர்கால விளைவுகள்... பெரும்பாலும் நேர் முரணானவையாக மாறிவிடுகின்றன.''

''உற்பத்தி செய்த, அல்லது விலைக்கு வாங்கப்பட்ட சரக்கை வழக்கமான பேராசைப்பட்ட லாபத்துடன் விற்றவுடன் அவன் (முதலாளி) திருப்தியுறுகிறான். அதன் பிறகு அந்தச் சரக்கிற்கோ அதை வாங்குபவர்களுக்கோ என்ன நேர்கிறது என்பதைப் பற்றி அவன் கவலை கொள்பவனாக இல்லை'' என்றார் எங்கெல்ஸ்.

முதலாளித்துவத்தின் அருந்தவப் புதல்வனான ப.சிதம்பரம் எங்கெல்சின் கூற்றைப் பொய்ப்பித்துக் காட்டிவிட்டார். சிகரெட் தயாரிக்கும் தரகு முதலாளித்துவ நிறுவனமான ஐ.டி.சி. நடத்திய வரி ஏய்ப்பை 'மன்னித்து' 350 கோடி ரூபாய் தள்ளுபடி செய்தார். புற்று நோய்க்கான மருந்தின் விலையை 100-இலிருந்து 1000 ரூபாயாக உயர்த்திக் கொள்ளும் ஏகபோக உரிமையை நோவார்ட்டிஸ் என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கு நீதிமன்றத்தில் பெற்றுக் கொடுத்ததன் மூலம், சிகரெட் புகைப்பவர்களுக்கு என்ன நேர்கிறது என்பது குறித்தும் தான் 'கவலை' கொண்டிருப்பதை அவர் நிரூபித்துக் காட்டினார்.

ஒவ்வொரு அழிவிலும், ஒவ்வொரு துயரத்திலும் தனக்கான சந்தையைக் கண்டுபிடிக்கிறது முதலாளித்துவம். மேற்பரப்பு நீரை அழித்துவிட்டு நிலத்தடி நீர் வேட்டைக்கு பம்பு செட்டு வியாபாரம்; நிலத்தடி நீரை அழித்து முடித்தவுடனே கடின நீரை நன்னீராக்கும் கருவிகளின் விற்பனை; ஒருபுறத்தில் குடிநீரைக் கழிவுநீராக்கும் ஆலைகள் - மறுபுறம் கடல்நீரைக் குடிநீராக்கும் எந்திரங்கள்!

''இயற்கையை ஆளும் விதிகளைக் கண்டு பிடிப்பதென்பது நுகர்வுப் பொருள் அல்லது உற்பத்திச் சாதனம் என்ற முறையில் மனிதனுடைய தேவைகளுக்கு அதனைக் கீழ்ப்படுத்துகின்ற சூழ்ச்சியாகவே தோன்றுகிறது'' என முதலாளித்துவத்தின் கையில் அகப்பட்ட இயற்கையின் அவல நிலையையும், அறிவியலின் தரத்தையும் விமரிசித்தார் மார்க்ஸ்.

**மண்ணுக்கும் மனிதனுக்கும், நீர்வளத்துக்கும் மனிதவளத்துக்குமிடையே முதலாளித்துவம் பாரபட்சம் காட்டுவதில்லை. பொரி பொரியாய்த் தெறித்து ஈரப்பசை ஒட்ட மறுக்கும் பாலாற்றின் படுகைக்கும், சொறியும் சிரங்கும் வந்து தோல் வறண்டு போன அந்தப் பகுதி மக்களின் தோலுக்கும் என்ன வேறுபாடு? ஒரத்துப்பாளையம் கழிவுநீருக்கும் சிறுமி செல்வராணியின் கொப்புளங்களிலிருந்து வழியும் சீழுக்கும் என்ன வேறுபாடு?**

இயற்கையின் மீதான தனது வினைகள் எத்தகைய எதிர்வினைகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்பது குறித்து முதலாளித்துவம் கவலைப்படுவதில்லை. ''ஆறு வற்றினால் நிலத்தடி நீர், அதுவும் வற்றினால் பனிப்பாறைகளை உருக்கு, கடல்நீரைக் குடிநீராக்கு...'' என்று வெட்டுக்கிளியைப் போல இயற்கையைச் சூறையாடிய படியே செல்கிறது. ஒவ்வொரு அழிவும், ஒவ்வொரு மாற்றமும் என்ன விளைவை ஏற்படுத்தும் என்ற தூரப் பார்வை அதற்குக் கிடையாது.

''மனிதகுலம் உயிர்வாழ்வதன் நோக்கம் உற்பத்தி- உற்பத்தியின் நோக்கம் லாபம்'' என்ற கிட்டப்பார்வைதான் முதலாளித்துவத்தை வழி நடத்துகிறது. இயற்கையை அழிக்கும் போதும், மாற்றியமைக்கும் போதும் அது மனிதனின் மீது என்ன விளைவுகளைத் தோற்றுவிக்கிறது என்பதைப் பற்றியும் முதலாளித்துவம் கவலைப்படுவதில்லை.


இயற்கையின் அதியுன்னதப் படைப்பான மனிதன் உயிரியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நாசமாக்கப்படுகிறான். கார்கள் வெளியிடும் புகையைச் சுவாசிப்பதன் விளைவாக மட்டும் மனிதனின் உடலில் ஈயத்தின் அளவு 100 மடங்கு அதிகரித்திருப்பதாகக் கூறுகிறது ஒரு ஆய்வு. ''ஒரு நுகர் பொருள் தோற்றுவிக்கும் நோயைக் குணப்படுத்த இன்னொரு நுகர்பொருள்'' என்று மனிதனின் உடலையே தனது லாப வேட்டைக்கான சுரங்கமாக மாற்றுகிறது முதலாளித்துவம். முதலாளித்துவப் போட்டியும் நெருக்கடியும் வேலை இழப்பும் பதட்டமும் நிச்சயமற்ற வாழ்க்கையும் மனிதர்களின் நரம்பு மண்டலத்தைச் சின்னாபின்னமாக்கி மன நோயாளிகளைப் பெருக்குகிறது.

பல லட்சம் ஆண்டுகளாய் நிலத்தடியில் சேமிக்கப்பட்ட எரிபொருட்களைச் சூறையாடும் அந்த லாபவெறி, மனிதன் எனும் இயற்கையின் அற்புதப் படைப்பையும் ஊனப்படுத்திச் சிதைக்கிறது. ''இயற்கையைப் பாதுகாக்கும் பொருட்டு மனிதர்களைக் கொல்ல வேண்டும்'' என்று பேராசிரியர் ஹார்டினைச் சொல்ல வைப்பது இயற்கையின் பால் அவர் கொண்ட காதல் அல்ல; அது லாபத்தின் மீதான காதல். இயற்கையின் சிறந்த படைப்பாகக் கூட மனித உயிரை மதிப்பிடவிடாமல் அவருடைய கண்ணை மறைக்கின்ற லாபவெறி!

முதலாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை இயற்கையைப் போலவே மனிதனும் ஒரு உற்பத்திச் சாதனம்;

தண்ணீர் கேட்டுப் போராடிய ராஜஸ்தான் விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு ! 5 பேர் சாவு.

**ஒரு குவளை குடிநீரின் விலை 5 உயிர்கள் !**



www.padippakam.com

இயற்கை வளத்தைப் போலவே மனித உழைப்பும் ஒரு விற்பனைச் சரக்கு. தேய்ந்து போன உற்பத்திச் சாதனங்களைத் தூக்கியெறிவதைப் போல, விற்க முடியாமல் தேங்கிப் போன தானியங்களைக் கடலில் கொட்டுவது போல, தேவைப்படாத மனிதர்களையும் ஹார்டின் அழிக்கவிரும்புகிறார். எனவே அவர்களை உபரி உற்பத்திப் பொருட்களாகக் கருதுகிறார்.

யார் எந்தப் பொருளை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று விரல்விட்டு எண்ணக் கூடிய பன்னாட்டு முதலாளிகளை அழைத்து ஆணை பிறப்பிக்க முடியாத ஹார்டின், யார் எவ்வளவு பிள்ளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உலக மக்களுக்கு ஆணையிடுகிறார். ''பொருளுற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியாது. அதற்கேற்ப மனித உற்பத்தியைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்! முதலாளிகளின் லாபம் சேர்க்கும் 'மனித உணர்ச்சி'யை கட்டுப்படுத்த முடியாது; அதற்குப் பொருத்தமாக உங்கள் புலனுணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்!'' என்று மக்களை, குறிப்பாக, ஏழை மக்களை எச்சரிக்கிறார் ஹார்டின்.

அராஜகம் என்பது முதலாளித்துவத்தின் பிறப்பியல்பு. சமூகமே உற்பத்தியில் ஈடுபடுவது, ஒரு சிலர் மட்டும் அதை நுகர்வது; ஒரு நிறுவனத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட உற்பத்தி, மொத்த உற்பத்தியில் அராஜகம் — என்பது முதலாளித்துவத்தின் முரண்பாடுகள். தானே தோற்றுவிக்கும் இந்த முரண்பாட்டிலிருந்து தான் விடுபடுவதற்காக போர்கள், பட்டினிக் கொலைகள் மூலம் முதலாளித்துவம் மனிதனைச் சூறையாடுகிறது. இயற்கையையும் சூறையாடுகிறது.

இயற்கை பதிலடி கொடுக்கிறது. பெருமழையாக, வறட்சியாக, பனிப்பொழிவாக, சூறைக்காற்றாக..., உடனுக்குடனோ, சற்றுத்தாமதித்தோ பதிலடி கொடுக்கிறது. ''இயற்கையின் மீது நமது மானுட வெற்றிகளை வைத்துக் கொண்டு நம்மை நாம் அளவு கடந்து தற்புகழ்ச்சி செய்து கொள்ள வேண்டியதில்லை. இப்படிப்பட்ட வெற்றி ஒவ்வொன்றுக்கும் இயற்கை நம்மைப் பழி வாங்குகிறது'' என்று குறிப்பிட்டார் எங்கெல்ஸ்.

தன்னளவில் ஒத்திசைவு கொண்டதாக இயங்கும் இயற்கையை ஒத்திசைவு அற்ற மனித சமூகம் எதிர்கொண்டு நிற்க இயலாது. 'தனது உற்பத்தி சக்திகளை ஒரே திட்டத்தின் அடிப்படையில் ஒன்றோடொன்று இணக்கமாகச் சேர்ந்து கொள்வதைச் சாத்தியமாக்குகின்ற சமூகம் மட்டும் தான்' இயற்கையுடனான உறவைச் சரியான முறையில் பேண முடியும்.

**ஒவ்வொரு அழிவிலும், ஒவ்வொரு துயரத்திலும் தனக்கான சந்தையைக் கண்டுபிடிக்கிறது முதலாளித்துவம். மேற்பரப்பு நீரை அழித்துவிட்டு நிலத்தடி நீர் வேட்டைக்கு பம்பு செட்டு வியாபாரம்; ஒருபுறத்தில் குடிநீரைக் கழிவு நீராக்கும் ஆலைகள் - மறுபுறம் கடல்நீரைக் குடிநீராக்கும் எந்திரங்கள்!**

இயற்கையைத் தனது உடலாகவும், உழைப்பைத் தனது சாரமாகவும் கருதுகின்ற பொதுவுடைமைச் சமூகத்தில் மட்டுமே இயற்கையுடனான முரண்பாட்டை மனிதகுலம் சரியாகக் கையாள முடியும். தனிச் சொத்துடைமையை மனிதனின் இயல்புணர்ச்சியாக அங்கீகரிக்கும் சமூகம், இயற்கையை அழிப்பதற்கு முன், தன்னுடைய சொந்த அழிவை, தானே விரைவுபடுத்திக் கொள்ளும்.

•••

உலகமயமாக்கம் என்ற பெயரில் திணிக்கப்படும் மறுகாலனியாக்கத்தின் உள்ளடக்கம் முதலாளித்துவம். வேறொரு வகை முதலாளித்துவச் சித்தாந்தத்தால் இதனை முறியடிக்க முடியாது. மனித குலமும் உயிரினச் சூழலும் பிழைத்திருக்க வேண்டுமாயின் முதலாளித்துவம் அழிந்தாக வேண்டும்.

''பொதுச்சொத்தின் அழிவா, தனியார்மயமா என்பதை நாம் உடனே முடிவு செய்தாக வேண்டும்'' என்கிறார் பேராசிரியர் ஹார்டின். ''இரண்டும் ஒன்றுதான்'' என்ற பதிலே இத்தகைய அற்பர்களுக்குப் போதுமானது.

எனினும் ஹார்டினையொத்த முதலாளித்துவ அற்பமதியினரின் வாதங்களை முன் ஊகித்துத் தனது மூலதனத்தில் விடையளித்திருக்கிறார் மாமேதை கார்ல் மார்க்ஸ்:

*''ஒரு மனிதன் பிறிதொரு மனிதனைத் தனது தனிச்சொத்தாக வைத்திருந்ததென்பது எங்ஙனம் (இன்று) அபத்தமானதாக ஆகிவிட்டதோ, அதேபோல, ஒரு உயர்ந்த சமூக - பொருளாதார அமைப்பின் பார்வையில், தனிப்பட்ட சிலர் (இன்று) இந்தப் புவியில் கொண்டிருக்கும் தனிச் சொத்துடைமை என்பதும் (நாளை) அபத்தமானதாகவே கருதப்படும். ஒரு முழுச் சமூகமோ, ஒரு தேசமோ, அல்லது சம காலத்தில் நிலவும் எல்லாச் சமூகங்களும் இணைந்தால்கூட யாரும் இந்தப் பூமியின் உடைமையாளர்களாகி விட முடியாது. அவர்கள் இந்தப் பூமியில் (வாழப்)பெற்றிருக்கிறார்கள், பயனடைகிறார்கள் - அவ்வளவுதான். 'ஒரு நல்ல குடும்பத் தலைவன் செய்வதைப் போல', தனக்குப் பின்னர் வரும் தலைமுறைகளுக்கு இந்தப் பூமியை மேலும் சிறப்பான நிலையில் அவர்கள் விட்டுச் செல்ல வேண்டும்.''*

• மருதையன்

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (ஆக'05) முடியும் சந்தா எண்கள்:**

**36, 204, 210, 211, 499, 504, 506, 572, 578, 873, 874, 878, 879, 881, 882, 883, 884, 885, 890, 892, 894, 901, 904, 941, 955, 973, 977, 1012, 1270**

**அடுத்த இதழுடன் (செப்'05) முடியும் சந்தா எண்கள்:**

**12, 90, 139, 156, 162, 199, 244, 295, 580, 585, 604, 616, 627, 635, 636, 637, 712, 765, 768, 769, 903, 905, 906, 919, 922, 923, 924, 920, 925, 926, 927, 928, 929, 930, 931, 933, 934, 935, 936, 937, 938, 939**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com

# ‘கோக்’: அடிமைத்தனத்தின் சுவை

வெள்ளையனுக்குக் கப்பம் கட்ட மறுத்து தூக்கில் தொங்கினான் கட்டபொம்மன். சுதேசிக் கப்பல் கம்பெனியை இயக்கிக் காட்டினார் வ.உ. சிதம்பரம். சுந்தரலிங்கம், பூலித்தேவன் என்று ஒரு வீரம் செறிந்த மரபைக் கொண்ட நெல்லை மண்ணின் மக்களுக்கு ஒரு சோடா கலர் கம்பெனி இன்று சவால் விடுகிறது.

கேவலம் ஒரு சோடா கலர் கம்பெனிதானே என்று நினைக்கலாம்; அரசாங்க முட்டை அம்மியை உடைக்கும் என்பதுபோல, இது அமெரிக்கக் குளிர் பானம்; எனவே, இது ஆற்றையே குடிக்கும்!

200 நாடுகளில் ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் வியாபாரம் செய்யும் இந்த அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம் ஒரு வகையில் ஆயுதக் கம்பெனிகளைக் காட்டிலும் அபாயகரமானது.

90-களின் துவக்கத்தில் இந்திய மென்பானச் சந்தையில் 60 சதவீதத்தை வைத்திருந்த கோல்ட் ஸ்பாட், தம்ஸ் அப் போன்ற பானங்களைத் தயாரித்து வந்த பார்லே நிறுவனத்தை வெறும் 123 கோடி ரூபாய்க்கு வாங்கியது கோக். வாங்கியவுடன் பார்லேவின் புகழ் பெற்ற தயாரிப்பான கோல்ட் ஸ்பாட்டை அழித்தது. ‘தம்ஸ் அப்’ கோக் நிறுவனத்தின் தயாரிப்பாக விற்பனை செய்யப்பட்டது. கோக் கைப்பற்றியது பார்லேயின் சந்தையை மட்டுமல்ல, அதன் இரண்டு இலட்சம் சில்லரை வியாபாரிகளையும், நாடு தழுவிய வலுவான வலைப் பின்னலையும் தான்.

பார்லேவைப் போன்ற மிகப் பெரிய நிறுவனமே கோக்கிடம் சரணடைந்தபின் மற்ற சிறு மென்பான நிறுவனங்களை பற்றிக் கேட்கவும் வேண்டுமா? தமிழக மென்பானத் தயாரிப்புகளான காளிமார்க், வின்சென்ட், மாப்பிள்ளை விநாயகர் மற்றும் வேலூர் பன்னீர் சோடாக்கள் கோக் - பெப்சி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. நாடெங்கும் இது போன்ற நூற்றுக் கணக்கான சிறு நிறுவனங்கள் அழிந்ததால் பல ஆயிரம் தொழிலாளர் குடும்பங்கள் வாழ்விழந்தன.

இப்படி உள்ளூர்த் தொழிலை அழித்து தன் தயாரிப்பைத் தவிர வேறெதுவும் சந்தையில் விற்கப்பட முடியாத நிலையை உருவாக்கி, இன்று 10,000 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்திய மென்பானச் சந்தையில் 95 சதவீதத்தைக் கைப்பற்றியுள்ளன கோக் மற்றும் பெப்சி நிறுவனங்கள்.

கோக்கின் சுவை இந்திய நாக்கிற்கே புதியது. அச்சுவைக்குக் காரணமான இரசாயனக் கலவையைப் பற்றி யாருக்கும் தெரியாது. அதில் போதையளித்து அடிமையாக்கக் கூடிய கோகோ சாறு உள்ளிட்ட பல பொருட்கள் இருப்பதாக கூறப்படுகிறது. இருந்தாலும் கேவலம் ஒரு மென்பானத்தில் கலக்கப்படும் மூலப்பொருட்கள் என்ன என்ற இந்த அற்பமான விசயம் ஒரு இராணுவ இரகசியம் போலக் காப்பாற்றப்பட்டு அந்த ‘பார்முலா’ இன்று வரை அட்லாண்டாவிலிருந்து விமானத்தில் வந்து இறங்கிக் கொண்டிருக்கிறது.

2003-இல் கோக்-பெப்சி பற்றிய இன்னொரு ‘சிதம்பர இரகசியம்’ அம்பலமானது. டில்லியைச் சேர்ந்த ‘விஞ்ஞானம் மற்றும் சுற்றுச் சூழலுக்கான கழகம்’ (C.S.E.), கோக் - பெப்சி தயாரிப்புகள் அனைத்தையும் ஆராய்ந்து, அதில் பெரும் அபாயத்தை விளைவிக்கக் கூடிய பூச்சிக் கொல்லிகளான டி.டி.டி., மாலதியான், லின்டேன் போன்றவை அனுமதிக்கப்பட்ட சர்வதேச அளவைவிட 36 மடங்கு அதிகமாக உள்ளது என அறிவித்தது.

உடனே அப்போதைக்கு ஒரு சலசலப்பும் விற்பனை வீழ்ச்சியும் ஏற்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் விரைவிலேயே அந்த பூச்சி மருந்து வியாபாரம் பழையபடி களைகட்டத் தொடங்கிவிட்டது.


நஞ்சு எனத் தெரிந்தபின்னரும் கோக் ரசிகர்கள் அதை வாங்கிக் குடிக்கிறார்கள் என்றால், டி.டி.டி.யைவிடக் கொடியதொரு நஞ்சுக்கு அவர்களது மூளை பழக்கப்பட்டு விட்டது என்பதே காரணம். அமெரிக்க நுகர்வுப் பண்பாட்டைக் கடைவிரிக்கும் ஹாலிவுட், பர்கர், பீட்சா, ராப்பிசை, எம்.டி.வி., எஃப்.டி.வி., வால்ட் டிஸ்னி போன்றவைகளுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது கோக்-பெப்சி கலாச்சாரம்.

வாங்கும் சக்தியுடைய வலுவான 15 கோடி இந்திய நடுத்தர வர்க்கமே கோக்கின் குறி. இந்த வர்க்கத்தினரை ஒவ்வொரு மாதமும் சில நூறு ரூபாய்களை கோக்-பெப்சிக்காகச் செலவிட வைப்பதே அவர்களின் இலக்கு. இதை அடைய கோக்-பெப்சி வகுக்கும் உத்திகள்தான் அவர்களின் வர்த்தக மேலாண்மை. அந்த உத்திகளுள் மிக முக்கியமானது இந்திய நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கை முறையை மாற்றி அமைப்பது. ''சேமிக்காதே செலவழி, கையில் காசு இல்லையா - கிரெடிட் கார்ட் இருக்கிறதே; வாரம் முழுவதும் மாடு மாதிரி வேலை செய் - வார இறுதியில் மாடு மாதிரி கொண்டாடு; சனிக்கிழமை இரவா - காபி பார், டிஸ்கொத்தே, அல்லது பிட்சா ஹட்; ஞாயிறா சத்தியம், மாயாஜால், கிஷ்கிந்தா; அரசியலா - அதுபற்றிக் கவலையில்லை, சமூகமா - எவன் எப்படிப் போனா என்ன?'' - என இந்திய நடுத்தர வர்க்கத்தின் சிந்த

## கோக்கின் ‘அரிய’ பயன்பாடுகள்

1. துரு நீக்கும் எண்ணெயாக
2. பூச்சிக் கொல்லி மருந்தாக
3. இரத்தக் கறை நீக்கும் ப்ளீச்சாக
4. பாட்டரியில் அடைக்கும் கிரீசாக
5. எலும்பை கறைக்கும் அமிலமாக

**இத வுட்டியே...**
**கக்கூச கழுவலாம் தலைவா!**



**எங்கே சொல்லு....**
**ரெண்டுக்கு போனா கொக்கோ கோலா.**

www.padippakam.com

னையை, பொருளாதாரக் கண்ணோட்டத்தை, உணவை, உறவை, உடையை அனைத்தையும் அமெரிக்கத் 'தரத்'திற்கு மாற்றுவதுதான் கோக்-பெப்சியின் வழிமுறை. இதைச் சாத்தியமாக்க அவர்கள் கையாளும் ஆயுதங்கள்தான் விளம்பரங்கள்.

ஒரு உற்பத்தியாளர் தனது தயாரிப்பை விளம்பரப்படுத்தும் பொழுது அதன் தரத்தையும் பயன்பாட்டையுமே விளம்பரம் செய்வாரென நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் கோக்-பெப்சியின் பதினைந்து ஆண்டுக்கால விளம்பரங்களை நினைவுபடுத்திப் பாருங்கள்! அவை ஒன்று கூட பயன்பாட்டைச் சொல்லாது, வாழ்க்கைக் கண்ணோட்டத்தையே சொல்லும்.

பெப்சி, தான் ஏன் சரியான தேர்வு எனச் சொல்லாமலேயே ''யே ஹி ஹே ரைட் சாய்ஸ் பேபி'' என இந்திய மக்களை 'ஆஹா!' போட வைத்ததில் துவங்கிய இந்த விளம்பர மோசடி இன்று ''கூல் டிரிங்குன்னா கோக்க கோலா'' வரை தொடர்கிறது. 'சுதந்திரம்னா பெப்சி' 'மனம் போல் தினம் ஜமாய் - கோக்ககோலா என்ஜாய்'', 'உள்ளம் கேட்குமே மோர்', 'கோக் அடி கூல், லைஃபே தூள்', 'ஹேவ் எ பெப்சி - ப்ளே இட் கூல்', 'என்ஜாய் கோக்' போன்ற விளம்பரங்களை கோல்ட் வின்னரின் எண்ணெய் விளம்பரத்துடனோ, சக்தி மசாலா விளம்பரத்துடனோ ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை சட்டென புரிந்து விடும்.

கோக்-பெப்சி விளம்பரப் படங்களின் காட்சிகளை அமைத்திருக்கும் விதமே அவர்களின் நோக்கத்தை அம்பலப்படுத்துகிறது. அழகான பெண்கள், ராக் இசை நிகழ்ச்சிகள், கிரிக்கெட் போட்டிகள், மேட்டுக்குடி கல்லூரி வளாகங்கள், ஷாப்பிங் மால்கள், சொகுசுக் கார்கள், சினிமா கதாநாயகர்கள், நாயகிகள், கிரிக்கெட் வீரர்கள், கல்லூரி மாணவர்கள் என இவர்கள் தங்கள் பானத்துடன் சேர்த்து ஒரு பண்பாட்டுச் சூழலையும் விற்கிறார்கள். தொலைக்காட்சி, எஃப்.எம், செய்தித்தாள், பிரம்மாண்ட விளம்பர பலகைகள், சுவர் விளம்பரங்கள், வாகன விளம்பரங்கள், தோரணங்கள், கடைகளின் பெயர்ப் பலகைகள், தொப்பிகள், தட்டிகள், பேனர்கள், போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள் ஏன் இமயமலைப் பாறைகளைக் கூட சிவப்பும் நீலமுமாக மாற்றியிருக்கின்றன கோக்-பெப்சி நிறுவனங்கள்.

**கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பதிலாக சோடா கலர் கம்பெனி; ராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் போன்ற கொடுங்கோலர்களுக்குப் பதிலாக த்ரிஷா, விக்ரம், சூர்யா போன்ற 'கிளுகிளு' பார்ட்டிகள்; தூக்குமரம், செக்கு, அந்தமான் சிறை ஆகியவற்றுக்குப் பதில் பிட்ஸா கார்னர், மழை நடனங்கள், களியாட்டங்கள்! வியக்கத்தக்க முன்னேற்றம்தான்!**

மேற்கூறியவை போல நேரடி விளம்பரங்கள் மட்டும் அல்லாமல் சினிமா, டிவி சீரியல்கள், சிறப்பு நிகழ்ச்சிகள், நுகர்பொருள் கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள், கேளிக்கை நடனங்கள் போன்றவற்றின் விளம்பரதாரர்கள் இவர்கள்; பீட்சா முதல் தோசை வரை அனைத்து உணவுப் பொருட்களுடனும் இலவசமாகவோ, கூட்டாகவோ, பெப்சி - கோக் வழங்குகிறார்கள்; ரெயில்வே நிலையம், பேருந்து நிலையம், கல்லூரிகள், அலுவலகங்கள், ஷாப்பிங் மால்கள், பெட்ரோல் பங்குகள், சூப்பர் மார்ட்டுகள், உடற்பயிற்சி நிலையங்கள், உணவகங்கள், திரையரங்குகள் போன்ற பொது இடங்களில் குடிநீர்த் தொட்டிகளை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தை கோக்-பெப்சியின் தானியங்கி இயந்திரங்கள் ஆக்கிரமித்து உள்ளன.

இவைதவிர 'பெப்சி குடி சினிமாவில் நடி', 'கோக் லேபிளைப் பிரி - செல்போன் ஃப்ரீ' என்னும் போட்டிகள்! தனது விளம்பரச் செலவுகளுக்காக மட்டும் பல நூறு கோடிகளை வாரி இரைத்து, நடுத்தர வர்க்கத்தை நான்கு திசைகளிலிருந்தும், அணுகுண்டு போல தொடர் தாக்குதலுக்கு உள்ளாக்கித் தனது குளிர்பானங்களில் அமெரிக்க நுகர்வெறிப் பண்பாட்டைக் கலந்து பருக வைத்து, அடிமையாக்கி இருக்கிறது கோக்.

பூச்சி மருந்துப் பிரச்சினை ஒருபுறமிருக்கட்டும். ஒரு மென்பானம் என்ற முறையில் கோக்கின் சுவையில் அப்படி என்னதான் சிறப்பு இருக்கிறது? அது நமது நாட்டின் விதவிதமான பழச்சாறுகள் வழங்கும் சுவையைக் காட்டிலும் உன்னதமான சுவையா என்றால் அதுவுமில்லை.


முதன்முதலில் கோக் குடிப்பவர்கள் அதைச் சிரமப்பட்டுத்தான் விழுங்குகிறார்கள். உலகத்துக்கே 'பிடித்தமான' இந்தச் சுவை நமக்கு மட்டும் பிடிக்காமல் போனால் அது இழிவோ என்று அஞ்சி சகித்துக் கொள்கிறார்கள். பிறகு மெல்ல மெல்ல அதற்குப் பழகி அடிமையாகி விடுகிறார்கள்.

வணிகமும் லாபமும் மட்டும்தான் இலக்கு என்றால், ஏற்கெனவே இந்திய மக்களின் நாவுக்குப் பிடித்தமானதாக இருக்கும் ஆரஞ்சு, எலுமிச்சை, திராட்சைச் சுவைகளிலேயே தனது பானத்தை கோக் அறிமுகப்படுத்திக் காசு பார்த்திருக்கலாம்.

ஆனால் காசுக்காகக் 'கொள்கை'யைத் துறக்க கோக் நிறுவனம் தயாராக இல்லை. ''இதுதான் கோக்கின் சுவை! இந்தச் சுவைக்கு ஏற்ப உன் நாக்கை மாற்றிக் கொள். நான் மாற முடியாது'' என்கிறது கோக்.

''இந்தியச் சந்தையில் எங்கள் முதல் எதிரி எலுமிச்சைச் சாறுதான்'' என்று பத்தாண்டுகளுக்கு முன் அறிவித்தார் கோக் நிறுவனத்தின் தலைவர். பல்வேறு விதமான உண

**மானங்கெட்டவர்களின் பானம் கோக்!**




சரத் அக்சர் - புகழ்பெற்ற புகைப்பட கலைஞர். கொக்கோ கோலாவை கேலி செய்து அவர் எடுத்த இந்தப் புகைப்படத்தை விளம்பரப்படுத்தியதற்காக ரூ. 20 லட்சம் கேட்டு இவர் மீது மான நட்ட வழக்கு தொடர்ந்துள்ளது, அமெரிக்க கோக்.


படிப்பகம்

www.padippakam.com

வுகள், பல்வேறுவிதமான சுவைகளுக்குப் பாரம்பரியமாகப் பழக்கப்பட்டிருக்கும் மக்களுடைய நாவின் சுவை நரம்புகளையே தான் சொன்னபடி ஆட்டி வைக்க முயலும் இந்த ஆதிக்க மனோபாவத்திற்கு இன்னுமென்ன விளக்கம் வேண்டும்?

'ஒரே பண்பாடு, ஒரே வாழ்க்கை முறை, ஒரே சுவை' என்று வெளிப்படையாகச் சொல்லாமல் நடைமுறையில் இந்த அடிமைத்தனத்திற்குத் தன் ரசிகர்களைப் பழக்கப்படுத்தியிருக்கிறது கோக். அதனால்தான் 'கோக்'கின் மீதான விமரிசனங்களைத் தன் மீதான விமரிசனமாகவும், தனது ஆளுமை மீதான விமரிசனமாகவும் கருதுகிறார்கள் கோக் ரசிகர்கள். ரஜினி ரசிகனைக் காட்டிலும் இழிந்த இந்த மனநிலை 'பூச்சிமருந்தை'ச் சுவைத்துக் குடிப்பதில் வியப்பில்லை.

கோக் குடிப்பவர்கள் அதன் கலாச்சார வன்முறைக்கு இலக்காகிறார்களென்றால், அதனைக் குடிக்காதவர்கள் 'கோக்'கின் நேரடி வன்முறைக்கு ஆளாகிறார்கள்.

ஒரு லிட்டர் கோக் தயாரிக்க ஏழு லிட்டர் கழிவு நீரை வெளியேற்றுகின்றன கோக்-பெப்சி ஆலைகள். வெளியேறும் ஒவ்வொரு லிட்டர் கழிவு நீரும் மேலும் எட்டு லிட்டர் நிலத்தடி நீரை மாசுபடுத்திப் பயனற்றதாக்குகிறது என்கிறார்கள் சூழலியல் ஆய்வாளர்கள். ஆக 1 லிட்டர் கோக் தயாரிக்க 56 லிட்டர் நல்ல நீர் அழிகிறது. ஏற்கெனவே நிலத்தடி நீரில்லாமல் மரணத்தின் விளிம்பில் நிற்கும் இந்திய விவசாயிகளின் தலையில் இடியென இறங்கிக் கொண்டிருக்கின்றன கோக்கின் ஆலைகள்.

***கேரளா (பிளாச்சிமடா):***

வறட்சியென்றால் என்னவென்றே அறியாத கேரளாவின் நீர்வளமிக்க பிளாச்சிமடா கிராமத்தில் 2000-ம் ஆண்டு இந்தியாவிலேயே தனது மிகப் பெரிய ஆலையை அமைத்தது கோக். நாளொன்றுக்கு 35 லட்சம் லிட்டர் தண்ணீரை உறிஞ்சியெடுத்து இரண்டே ஆண்டுகளில் பிளாச்சிமடாவை நீர் ஆதாரமற்ற பாலை நிலமாக மாற்றியது.

***உத்திரப்பிரதேசம் (வாரணாசி):***

வாரணாசியில் இயங்கிவந்த பார்லேயின் ஆலையை வாங்கிய கோக், நாளொன்றுக்கு 20 லட்சம் லிட்டர் தண்ணீரை உறிஞ்சியெடுத்தது. மேலும் தனது நச்சுக் கழிவுகளை வயல்வெளிகளிலும், கால்வாய்களிலும், கங்கை நதியிலும் கொட்டி ஊரையே சாக்கடையாக்கியது கோக். விவசாயிகள் தங்கள் வயல்களில் கொட்டப்பட்ட கழிவுகளை அப்புறப்படுத்த முனைந்த பொழுது பல விநோதமான சரும நோய்களால் பீடிக்கப்பட்டனர். கொசுக்கள் பெருகி மலேரியா காய்ச்சல் பரவியது. மண் அழிந்தது, நீர் அழிந்தது, வாழ்வழிந்தது.

***ராஜஸ்தான் (காலாதரா):***

பாலைனப் பகுதியான ராஜஸ்தானையும் கோக் விட்டு வைக்கவில்லை. அம்மாநிலத்தின் நீர்வளமிக்க பகுதியான காலாதராவில் 1999-இல் ஆலை அமைத்த கோக், 24 மணி நேரமும் போர் பம்புகளை இயக்கி ஒன்பதே மாதங்களில் 1,74,301 கன அடி தண்ணீரை உறிஞ்சி எடுத்து காலாதராவையும் பாலைவனமாக்கியது.

**லாபம் மட்டும்தான் இலக்கு என்றால், ஏற்கெனவே இந்திய மக்களின் நாவுக்குப் பிடித்தமானதாக இருக்கும் ஆரஞ்சு, எலுமிச்சை, திராட்சைச்சுவைகளிலேயே தனது பானத்தை கோக் அறிமுகப்படுத்திக் காசு பார்த்திருக்கலாம். ஆனால், ''இதுதான் கோக்கின் சுவை! இந்தச் சுவைக்கு ஏற்ப உன் நாக்கை மாற்றிக் கொள். நான் மாற முடியாது!'' என்கிறது கோக்.**

***மகாராட்டிரம் (தானே):***

1997-இல் தானேவின் வாடா தாலுக்காவில் ஆலை அமைத்த கோக் நாளொன்றுக்கு 3 லட்சம் லிட்டர் தண்ணீரை உறிஞ்சியது. ஆற்றில் நீர் வரத்து இல்லாத பொழுதும் அணையிலிருந்து குழாய் மூலம் நீரை வரவழைத்து மக்களுக்கு நீரில்லாமல் செய்ததன் விளைவாகக் குடிக்கக் கூட நீரில்லாமல் ஊரை காலி செய்யும் நிலைக்கு மக்களைத் தள்ளியது கோக்.

இவை தவிர ஆந்திரம், வங்காளம், பஞ்சாப் என பெப்சி - கோக் ஆலை அமைத்த இடங்களிலெல்லாம் நன்னீர் வளங்களை அழித்தே தனது மென்பானத்தையும், பாட்டில் நீரையும் விற்பனை செய்கிறது.

தனது பணபலம், அதிகார பலத்தின் மூலமாக கோக்-பெப்சி தனது குற்றங்களையும் அதற்கெதிரான மக்கள் போராட்டங்களையும் எந்த ஊடகங்கள் வாயிலாகவும் உலகத்திற்குப் போய்ச் சேராமல் இருட்டடிப்பு செய்கிறது.

பூச்சி மருந்து விவகாரம் கிளம்பியவுடனே கோக்கிற்கு நற்சான்று கொடுத்தார் அமைச்சர் சுஷ்மா சுவராஜ்; பிளாச்சிமடாவில் நிலத்தடி நீர் வற்ற கோக் காரணமல்ல என்றது 'நிபுணர்' குழு; கோக்கின் கழிவுகளால் நிலம் பாழாகவில்லை என்று சத்தியம் செய்கிறார்கள் உ.பி. மாநில மாசு கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகள்.

கோக்கிற்கு எதிராகப் பேசுபவர்கள் அரசின் அடக்குமுறையைச் சந்தித்தாக வேண்டும். பிளாச்சிமடாவில் அமெரிக்க மூலதனம் 'தாக்கப்படுவது' குறித்துக் கவலை தெரிவிக்கிறார் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர்.

அரசு மூலமாக மட்டுமல்ல, கேரள உயர்நீதி மன்றம் மூலமும் கோக் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது. தற்போது உச்சநீதி மன்றத்தில் நடக்கும் வழக்கில் கோக் முன்வைக்கும் வாதம் சொரணையே இல்லாத எருமை மாடுகளுக்கும் சொரணை அளிக்கத்தக்கது.

''உங்கள் நாட்டுத் தண்ணீரிலும் கரும்பிலும் பூச்சி மருந்து இருக்கும் போது என்னுடைய குளிர்பானத்தை மட்டும் ஏன் கேள்வி கேட்கிறாய்?'' என்கிறது கோக்.

இந்த 'கோக்'கிற்குத்தான் லிட்டர் ஒண்ணே கால் பைசாவுக்குத் தாமிரவருணித் தண்ணீரை வழங்க இருக்கிறது தமிழக அரசு. பாட்டில் தண்ணீர் பிரியர்களும், கோக் ரசிகர்களும் அதைக் காசு கொடுத்து வாங்கிக் குடிக்கவும் போகிறார்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பதிலாக சோடா கலர் கம்பெனி; ராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் போன்ற கொடுங்கோலர்களுக்குப் பதிலாக த்ரிஷா, விக்ரம், சூர்யா போன்ற 'கிளுகிளு' பார்ட்டிகள்; தூக்குமரம், செக்கு, அந்தமான் சிறை ஆகியவற்றுக்குப் பதில் பிட்ஸா கார்னர், மழை நடனங்கள், களியாட்டங்கள்!


வியக்கத்தக்க முன்னேற்றம்தான்!

**● கார்மேகம்**



படிப்பகம்

www.padippakam.com




# தனியார்மயத்திற்கு மனித முகம் பொருந்துமா?

**கொ**ஞ்சம் நினைத்துப் பார்த்தால், அரசியல் பொருளாதார அறிவு பெரிதாக இல்லாத சாதாரண சாமானியர்களே வியக்கத்தக்க விசயம் இது. எந்தக் கட்சி ஆட்சியானாலும் (இந்தக் காலத்தில் ஆட்சி அதிகாரத்தை ருசி பார்க்காத ஓட்டுக் கட்சிகளோ மிகவும் குறைவு!) தாலி வாங்கிய இந்து மனைவி கணவனுக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்டதைப் போல தனியார் மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கைக்கு விசுவாசமாக நடந்து கொள்கிறார்கள். இது ஏன்? எப்படி? எதற்காக?

இந்தக் கொள்கை அமலாக்கப்பட்டு, சாதனைகள் நிகழ்ந்ததற்கான சான்றுகள் எதுவும் கிடையாது. மாறாக, இதனால் உலக நாடுகளில் பலவும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் ஆழமாக வீழ்ந்து, திவாலாகிப் போனதாகத்தான் தெரிகிறது. இந்தக் கொள்கையை அமலாக்கும் ஆட்சியாளர்கள் அடுத்தடுத்துத் தேர்தல்களில் தோற்கடிக்கப்படுகிறார்கள்.

வாக்காளர்களைக் கவர்வதற்குத் தோதான செயல்பாடுகளில் ஈடுபடுவது தானே ஓட்டுக் கட்சிகளின் இயல்பு! ஆனால், பாருங்கள், நாட்டின் தேர்தல் அரசியல் கட்சிகள் அனைத்துமே வாக்காளர்கள் வெறுக்கும் கொள்கைகளைச் செயல்படுத்துகிறார்கள்! ஏனென்றால் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆளுங்கட்சியானாலும், தோல்வியடைந்து எதிர்க்கட்சியானாலும் தனியார் தரகு முதலாளிகள், ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து வருவாய் கிடைத்து விடுகிறது; அளவில்தான் வேறுபாடு இருக்கிறது. ஆகவே, வாக்காளர்களைக் கவர்வதற்கு அவர்கள் விரும்பும் கொள்கைகளை முன்வைப்பது அவசியமில்லை.

மேலும், ஓட்டுக் கட்சி தமது கொள்கைகளை முன்வைத்து வாக்குகளைப் பெறுவது கிடையாது; வெற்றி பெறுவதற்கு வேறுபல வழிமுறைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் தேசியமயமாக்கம்தான் தனது பொருளாதாரக் கொள்கை என்று கூறி வாக்காளர்களை ஈர்த்தது போல, இப்போது தனியார்மயமாக்கம்தான் (இது தான் அவர்கள் பின்பற்றும் கொள்கை) என்று எந்த அரசியல் கட்சியும் துணிவாகவும் வெளிப்படையாகவும் கூறிக் கொள்வதில்லை. அதைத் தமது இரகசியத் திட்டமாகவும் கொள்கையாகவும் வைத்துக் கொண்டு சதித்தனமாக - திருட்டுத்தனமாக நிறைவேற்றி வருகிறார்கள்.

இதிலிருந்து தெரியவில்லையா தனியார்மயமாக்கம் என்பது பலரும் கருதுவதுபோல வெறுமனே ஒரு பொருளாதாரக் கொள்கை அல்ல. அரசின் ஆதிக்கத்திலுள்ள பொதுச் சொத்துக்களை - மக்கள் செல்வங்களையும் நாட்டுச் செல்வாதாரங்களையும் தனியார் தரகு முதலாளிகளும், ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும் அந்நிய ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகளும் கொள்ளையடிப்பதற்கு மறு பெயர்தான் தனியார்மயமாக்கம். அதனால்தான் இரகசியமாக சதித்தனமாக அக்கொள்கையைச் செயல்படுத்துகிறார்கள்.

தனியார்மயம் முதலிய புதிய பொருளாதாரக் கொள்கைகளை ஏகாதிபத்திய நிறுவனங்கள் திணிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே, பின்னாளில் ஜனதா கூட்டணியாக உருவெடுத்த பார்ப்பன - பனியா கும்பலின் அப்பட்டமான முகவர்கள் இங்கே வாதாடி - போராடி வந்திருக்கிறார்கள். பார்ப்பன அரசியல் குருவான இராஜாஜி அவர்களுக்குத் தலைமையேற்றார். நேரு - காந்தி பரம்பரையின் பழைய பொருளாதாரக் கொள்கையை ''லைசென்சு - பர்மிட் - கோட்டா'' ஆட்சி என்று அவர்கள் கேலி செய்தனர். பதிலுக்கு இவர்களை ''ஏகபோக முதலாளிகள் - ஏகாதிபத்தியங்களின் ஏஜெண்டுகள், பிற்போக்காளர்கள், சிண்டிக்கேடர்கள்'' என்று காங்கிரசு - கம்யூனிஸ்டு அணியினர் சாடினர்.

இவ்வாறு இங்கு தனியார்மயமாக்கம் முதலியவை புகுத்தப்படுவதற்கு முன்பாக அதற்கு ஆதரவான தளம் அப்பட்டமான பிற்போக்கு பார்ப்பன - பனியா கும்பலால் உருவாக்கப்பட்டிருந்தது. முதலில், ருசிய - சீன எதிர்ப்பு தேசியவெறி, கம்யூனிச - சோசலிச எதிர்ப்பு என்பதில் தொடங்கி (தேர்தல்கள் மூலம் ஆட்சிக்கு வரும் வாய்ப்பு குறைந்த போது அரசியல்வாதிகள் மீது பொதுவான வெறுப்பைத் தூண்டி அரசியலற்றவாதத்தைப் பரப்பி) அரசுத்துறை சார்ந்த பொருளாதாரத்தைச் சாடுவது, தேசியமயத்தை எதிர்ப்பது என்பதாக தனியார்மயமாக்கம், ஏகபோக - ஏகாதிபத்திய ஆதரவுப் பிரச்சாரம் செய்தனர். இப்போதும் இடஒதுக்கீடு எதிர்ப்பு, சிறுபான்மை மற்றும் தேசிய இன மக்கள் உரிமை எதிர்ப்பு பிற்போக்கு பாசிச சக்திகளால்தான் புதிய பொருளாதாரக் கொள்கை தாங்கிப் பிடிக்கப்படுகிறது.

ஆனால் தனியார்மயமாக்கத்தின் விளைவாக நேரடி பாதிப்புக்குள்ளா


படிப்பகம்

www.padippakam.com

கும் மக்கள் பிரிவினர் அதைக் கடுமையாக எதிர்த்துப் போராடுகிறார்கள். பால்கோ - அலுமினிய ஆலையை தனியாருக்கு விற்கும் முடிவை எதிர்த்துப் போர்க்குணத்தோடு போராடிய தொழிலாளர்கள் ஈவிரக்கமின்றி அடக்கப்பட்டனர். உத்திரப் பிரதேசத்தைத் தொடர்ந்து ஆந்திராவில் மின்சாரத் துறை தனியார்மயமாக்கத்தை எதிர்த்த தொழிலாளர் - மக்கள் போராட்டங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுப் பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

தனியார்மயமாக்கம், நிர்வாகத் திறமைமிக்கதாக மாற்றி, தொழில் தரம் உயரும் என்ற வாதமும் தற்போது தகர்க்கப்படுகிறது. நாட்டின் பொருளாதாரத் தலைநகரமாம் மும்பை மற்றும் அரசியல் தலைநகரமாம் டெல்லியின் மின் விநியோகம் ரிலையன்சு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. சமீபத்திய பேய்மழை - வெள்ளப் பெருக்குக்குப் பிறகு மின் இணைப்பு பல நாட்கள் துண்டிக்கப்பட்ட மும்பை பல நாட்கள் இருளில் மூழ்கி - தொழிலும் பாதிக்கப்பட்டுக் கிடந்தது. மும்பைப் புறநகரில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பழைய மின் வாரியம் விரைந்து செயல்பட்டு சரி செய்தும், தனியார் நிறுவனமான ரிலையன்சு பல நாட்கள் உறங்கிக் கிடந்தது.

இதே ரிலையன்சு நிறுவனம் அடிக்கடி மின் அளவை மின்னணு இயந்திரத்தை மாற்றி பயனீட்டு அளவை பன்மடங்கு கூட்டிக் காட்டி தில்லுமுல்லுகள் செய்து கொள்ளையடிப்பதாக டெல்லி வாழ் நுகர்வோர் குழுக்கள் புகார் கூறி வருகின்றன. தொலைத்தொடர்புச் சேவை நடத்தும் இந்த நிறுவனம் வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை எல்லாம் உள்ளூர் அழைப்புகளாகக் காட்டி, அரசு நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய பத்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கட்டணத்தொகை மோசடி செய்துள்ளது.

இவ்வாறு தனியார் நிறுவனங்களின் மோசடிகள், தில்லுமுல்லுகள் பலவும் அவ்வப்போது அம்பலமாகி வருகின்றன. தனியார்மயமானால், ஊழியர்கள் கடமைப் பொறுப்போடு வேலை செய்வார்கள், அரசு நிறுவனங்களில் நடப்பது போல பணிகளைத் தட்டிக் கழிக்க முடியாது என்பது போன்ற கருத்துக்கள் நடுத்தர மக்களிடம் நிலவுகிறது. ஆனால் இதெல்லாம் கீழ்நிலைத் தொழிலாளர்களுக்குத்தான் எப்போதும் பொருந்தும். இவர்களுக்குத்தான் தொழிற்சங்க உரிமைகள், பணி-ஊதிய சலுகைகள் மறுக்கப்பட்டுக் கடுமையாக அடக்கி ஒடுக்கியும் சுரண்டப்படுகிறார்கள்.

உயர் அதிகாரிகளுக்குப் பாலியல் சுற்றுலா உட்பட பல சலுகைகளும் வழங்கப்படுகின்றன. தனியார் நிறுவனங்கள் வரியேய்ப்பு முதலிய மோசடிகள் செய்து சிக்கிக் கொள்ளும்போது இலஞ்ச ஊழலில் ஈடுபடுகின்றன. அந்தச் சமயத்திலும் பிற நிறுவனங்களோடு தொழில் உறவுகள் (விற்பனை - வாங்குவதில் சேவை முதலிய) ஒப்பந்தங்கள் போடும்போதும், கட்டுமானப் பணிகள் போன்ற வேலைகளின் போதும், பணியாளர்கள் நியமனத்தின் போதும் தனியார் நிறுவனங்களிலும் இலஞ்ச ஊழல் தலைவிரித்தாடுகின்றது.

**தேசியமயமாக்கம், அரசுடைமையாக்கம் என்பதே தனியார்துறையின் தோல்வியிலிருந்தும் அதன் தேவைக்காகவுமே உருவாக்கப் பட்டது என்பது இன்றைய இளையதலைமுறைக்குத் தெரியாது.**

நாட்டின் மின்தேவையை நிறைவு செய்வதற்காக என்று சொல்லி அமெரிக்காவின் மோசடி நிறுவனமான என்ரானுடன் ஒப்பந்தம் போட்டு அந்நிய - தனியார்துறையில் தபோல் மின்திட்டம் மராட்டியத்தில் அமைக்கப்பட்டது. நாட்டுக்குப் பெருஞ்சுமையாகி விடும் என்று இத்திட்டத்தை முற்போக்கு இயக்கங்கள் கடுமையாக எதிர்த்தன. இத்திட்டத்தில் இலஞ்ச - ஊழல் தலைவிரித்தாடியதாக ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டே, எதிர்ப்பை மீறி, காங்கிரசும், பா.ஜ.க.வும் மாறி மாறி ஆட்சிக்கு வந்தபோது தபோல் மின்திட்டம் அமைக்கப்பட்டது. என்ரான் நிறுவனத்தின் மிகையான மின்கட்டண வசூலுக்கு ஈடுகொடுக்க முடியாத மராட்டிய மாநில அரசுக்குப் பதிலாக இந்திய அரசு பல நூறு கோடி தண்டம் கட்டியும், ஒப்பந்தத்தை மீறியதாக உலக நீதிமன்றத்தில் வழக்குப் போடுவதாக மிரட்டுகிறது, என்ரான்.

புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்ட பிறகு ஏராளமான தொழில் - நிதி மற்றும் பங்குச் சந்தை நிறுவனங்கள் முளைத்தன. அத்தனையும் போலியானவை என்று விரைவிலேயே தெரிய வந்துவிட்டது. கொள்ளை இலாபவட்டி ஆசைகாட்டி நடுத்தர மக்களிடமிருந்து கொஞ்ச நஞ்சச் சேமிப்புகளையும் சூறையாடி விட்டு இந்த நிறுவனங்கள் மழைக்காலக் காளான்களாய் மறைந்து போயின. அடுத்து பொதுத்துறை நிதி நிறுவனங்களின் சேமிப்புகள் பங்கு பத்திர ஊழல்கள் - முறைகேடுகள் மூலம் கொள்ளையடிக்கப்பட்டன.

மோட்டார் வாகன உற்பத்தி முதல் குளிர்பானங்கள் - குடிதண்ணீர் விற்பனை வரை அந்நிய ஏகாதிபத்தியத் தொழில் நிறுவனங்களின் ஏகபோகம் நிறுவப்பட்டது. அந்த நிறுவனங்களோடு இந்தியத் தரகு முதலாளிகளும் சேர்ந்து தொழில்களை நவீனமயமாக்கி விரிவுபடுத்திய போது இலட்சக்கணக்கான சிறிய - பெரிய உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டும், ஆட்குறைப்பு செய்யப்பட்டும் கோடிக்கணக்கானோர் வேலை பறிக்கப்பட்டுத் தெருவில் வீசப்பட்டனர். சுற்றுச்சூழலை நாசமாக்கி மக்களைக் கொள்ளை நோய் மரண வாசலில் தள்ளும் தொழில்கள் பெருகின.

கொள்ளை இலாபந்தரக் கூடிய நுகர்பொருள் உற்பத்தி (அழகு சாதனப் பொருட்கள், பொழுது போக்குச் சாதனங்கள் போன்றவை), வங்கி - காப்பீடு - சுற்றுலா - சினிமா - வானொலி - வானொளி - விளம்பரம் - தொலைத் தொடர்பு போன்ற சேவைத்துறைத் தொழில்களில் மட்டுமே தனியார் தரகு முதலாளிகள் முதலீடு செய்வதில் அக்கறை காட்டுகின்றனர். அதேசமயம் தனியார் தரகு முதலாளிகளுக்குத் தேவையான அடிப்படைக் கட்டுமான வசதிகளைப் பெருக்கித் தருவதற்கான முதலீடும் பணிகளும் இன்னமும் அரசுத் துறை பொறுப்பிலேயே நடக்கின்றன.

இதைவிட மோசமானது என்னவென்றால், மக்களிடமிருந்து பலவழிகளிலும் திரட்டப்பட்ட சேமிப்பு, அந்நிய - உள்நாட்டுக் கடன்கள் மூலம் பெறப்பட்ட கடன் தொகையையும் கொண்டு இலாபகரமாக நடத்தப்பட்ட பொதுத்துறைத் தொழில்கள் எல்லாம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு தனியார் தரகு முதலாளிகளுக்கு அடி



படிப்பகம்

www.padippakam.com

மாட்டு விலைக்கு விற்கப்படுகின்றன. இந்தத் துரோக வேலையைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு ஒரு தனி அமைச்சகமே ஏற்படுத்தப்பட்டது.

நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் அவசியமானவை என்று கூறப்பட்ட மின்உற்பத்தி - விநியோகம், கப்பற் துறைமுகம், இரயில்வே - சாலைப் போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் அனைத்தும் தனியார் தரகு முதலாளிகளுக்கு விற்கப்படுகின்றன. இன்றியமையாத் தேவையென்று கூறி மக்கள் நிலங்களைக் கையகப்படுத்தி, மேற்படி வசதிகள் செய்து தரப்படுகின்றன. பொதுநலச் சேவைக்கானவை என்று கூறப்பட்ட மருத்துவம், கல்வி, குடிநீர், சுகாதாரம் போன்றவையெல்லாம் இலாபம் தரக்கூடிய தொழில்களாக மாற்றப்பட்டுத் தனியார் கொள்ளைக்கு வழிவகை செய்யப்படுகின்றன. ஆற்றுமணல், புறம்போக்கில் உள்ள கற்பாறைகள், காடுகள் எல்லாம் தனியார் தரகு முதலாளிகளின் கொள்ளைக்கு ஏலம் விடப்படுகின்றன.

முன்பெல்லாம் தேசியமயம், தனியார் ஏகபோக ஆதிக்க ஒழிப்பு, இந்தியமயம் என்று கூச்சல் போட்டார்கள். அப்போது பல மாநிலங்களில் காந்தி - நேரு காங்கிரசு கட்சியின் ஏகபோக ஆட்சிகள் கவிழ்ந்து, மத்தியில் அதன் ஆட்சி ஆட்டங் கண்டிருந்தது. இந்த முழக்கத்தை வைத்து அன்றைய ஆட்சியாளர்கள் தேர்தல்களில் செழிப்பான அறுவடை செய்து கொண்டார்கள்.

நாட்டின் பெரிய வங்கிகள், பெட்ரோலிய வியாபாரம், கனரகத் தொழில்கள், சுரங்கத் தொழில்கள், போக்குவரத்துத் தொழில்கள் என்று ஆரம்பித்து, பால் - மீன் - முட்டை - கோழி - கறிக்கடைகள் நடத்துவது வரை அரசுத்துறையின் கீழ் கொண்டு வரப்பட்டன. தொழில்துறையில் ஏகபோக ஆதிக்கத்தைத் தடுக்கவும் அந்நிய மூலதன ஊடுருவலைத் தடுக்கவும் சட்டங்கள் வந்தன. அந்நிய நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி மற்றும் குவிப்பைத் தடுப்பதற்கு காப்பு வரித் தடைகள் போடப்பட்டன.

அன்றைய "அந்தப் பொருளாதாரக் கொள்கை நாட்டை பின்தங்கிய நிலைக்குத் தள்ளிவிட்டது; நாட்டின் பொருளாதாரம் தேக்க நிலையிலும் நெருக்கடியிலும் சிக்கி விட்டது" என்று கூறி அதற்கு எதிராக வந்திருப்பதுதான் புதிய பொருளாதாரக் கொள்கை.




தனியார்மயம், தாராளமயம், உலகமயம் ஆகியன அடங்கிய இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் மகிமைகள் என்று பலவும் சொல்லப்படுகின்றன.

"தேசியமயம் முதலிய பழைய பொருளாதாரக் கொள்கை நாட்டின் தொழில் - பொருளாதார வளர்ச்சிக்குக் கேடு விளைவித்து விட்டது; அரசுத்துறை - பொதுத்துறைத் தொழில்கள் வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவது போன்று பெரும் நட்டம் ஏற்படுத்திவிட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையால் தொழிலும், தொழில்நுட்பமும் நவீனப்படுத்தப்படும். தனியார்துறை என்றாலே நிர்வாகத்திறமை - ஊக்கம், முன்முயற்சி, பொறுப்பு போன்றவை தானே பொதிந்திருக்கும். வீண்விரயம், காலதாமதம் இருக்காது. போட்டி மனப்பான்மையால் தரம் பராமரிக்கப்படும். தனியார்துறை அதிகாரிகள் - அலுவலர்கள் - ஊழியர்கள் மேல்மட்ட நிர்வாகத்துக்கும் நுகர்வோருக்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பை உணர்ந்து வேலை செய்வார்கள். குற்றம் - குறை நேர்ந்தால் தண்டிக்கப்படுவோம் என்ற பயம் இருக்கும். அனாவசியமான அரசியல் தலையீடு, அதிகார முறைகேடு, சிகப்பு நாடாமுறை, தேவையற்ற தொழில் தகராறுகள் இருக்காது."

"மேலும் மறைமுக - நேரடி அந்நிய மூலதனம் - முதலீடு குவியும்; தொழில் வளம் பெருகும். உலகச் சந்தையில் போட்டி போட்டு இந்தியத் தொழில்கள் நவீன உற்பத்தி, நிர்வாகத்திறமை, தரமான சரக்கு என்று வளரும். மொத்தத்தில் நாட்டின் பொருளாதாரம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும்" என்று இப்போது கூறுகிறார்கள்.

ஆனால், தேசியமயமாக்கம், அரசுடைமையாக்கம் என்பதே தனியார் துறையின் தோல்வியிலும் தேவைக்காகவுமே உருவாக்கப்பட்டது என்பது இன்றைய இளையதலைமுறைக்குத் தெரியாது. அதாவது இரும்பு எஃகு, சாலை - ரயில் போக்குவரத்து, மின்உற்பத்தி, செய்தித் தொடர்பு, அணைக்கட்டு - நீர்ப்பாசன வசதி போன்ற துறைகளில் பெருமளவுக்கு முதலீடு போடுமளவுக்குத் தனியார் முதலாளிகளிடம் அப்போது மூலதனமும் இல்லை; இவற்றின் மூலமான இலாப விகிதமும் குறைவாகவே இருந்தன. இத்தேவைகளை அரசுத் துறை மூலமாக நிறைவேற்றிக்


படிப்பகம்

www.padippakam.com

கொண்ட அவர்கள், கொள்ளை இலாபம் கிடைத்த நுகர்பொருள் உற்பத்தியில் கவனம் செலுத்தினர்.

அப்படியிருந்தும் புதிய முதலீட்டுக்கும் நவீனமய மாக்கத்துக்கும் போதிய மூல தனக் குவிப்பை தனியார் துறை முதலாளிகள் எட்ட முடியாமல் நூற்றுக்கணக்கான பெரிய, ஆயிரக்கணக்கான சிறிய ஆலைகள் நலிவுற்று நெருக்கடியில் சிக்கிக் கொண்டன. நெருக்கடியிலிருந்து அவற்றை மீட்கும் முகமாக நலிவுற்ற ஆலைகளை அரசுடைமையாக்குவதும், வங்கிகளை அரசுடைமையாக்கி மூலதனக் குவிப்பை அடையவும் தேசியமயமாக்கம் முதலிய பொருளாதாரக் கொள்கைகள் புகுத்தப்பட்டன.

தேசியமயமாக்கம் என்ற பெயரில் நடந்த அரசுடைமையாக்கம் என்பது எந்த வகையிலும் சோசலிசத்தன்மை வாய்ந்ததோ, நாட்டின் பொதுமக்களுக்கு, குறிப்பாக உழைக்கும் மக்களுக்கு நன்மை செய்யும் சீர்திருத்தமோ கிடையாது. உண்மையில் அது தொழிலையும் பொருளாதாரத்தையும் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்தில் வைப்பதாகும். இதற்கேயுரிய அதிகார முறைகேடுகள் இலஞ்ச ஊழல் காரணமாகவும், தனியார் தரகு முதலாளிகளுக்கும் பண்ணை நிலப்பிரபுக்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் காரணமாகவும் தொடர்ந்து பின்பற்றப்பட்ட இராணுவமயமாக்கம் காரணமாகவும் அரசுக்கு மேலும் பெரும் பொருளாதார நெருக்கடியும் அந்நிய உள்நாட்டுக் கடன் சுமையும் பல்கிப் பெருகின.

இவற்றின் விளைவாக, உலக வங்கி, சர்வதேச நிறுவனம் மற்றும் பிற ஏகாதிபத்திய அமைப்புகளின் பெரும் கடன் கேட்டுக் கையேந்திய இந்திய அரசுக்கு பல்வேறு கடும் நிபந்தனைகள் - கட்டளைகள் விதிக்கப்பட்டன. பொருளாதாரச் சீர்திருத்தம், கட்டுமான மறுசீரமைப்புக்காக தனியார்மயம், தாராளமயம், உலகமயம் திணிக்கப்பட்டது. கடும் பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து கிடக்கும் நாடுகளின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தும் மாய மருந்தாக - மந்திரமாகச் சொல்லப்படுவதுதான் இந்தச் சூத்திரம்.


**எரிந்து போனவர் ஒரு தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்தான்! ஆனால், எந்தவொரு தீவிரவாத இயக்கத்தின் தற்கொலைப் படையுமில்லை. ''வேலையில்லாத் தற்கொலைப் படை''யைச் சேர்ந்தவர்! சென்னை பூவிருந்தவல்லி அருகே உள்ள தனியார் நிறுவனங்களில் அடுத்தடுத்து தற்காலிக வேலைகளிலிருந்து விரட்டப்பட்டவர்.**

ஆனால் இச்சூத்திரம் அமலாக்கப்பட்டதன் விளைவாக உலகின் பலநாடுகளிலும் ஆலைகள் - தொழில்கள் மூடப்பட்டன. பொருளாதார நெருக்கடிகள் முற்றி, திவாலாகிப் போயின. வறுமை வேலையில்லாத் திண்டாட்டம், பட்டினிச் சாவுகள் பெருகின. அதனால்தான் இப்போது ''மனிதமுகம்'' கொண்ட சீர்திருத்தம் செய்யும்படி பரிந்துரைக்கப்படுகிறது.

•••

சில வாரங்களுக்கு முன்புதான் அது நடந்தது. கோவையை நெருங்கிக் கொண்டிருந்த சேரன் துரித ரயில் வண்டி அதிகாலையில் திடீரென்று தீப்பிடித்து, இரண்டு பெட்டிகள் எரிந்து சாம்பலாயின. இரயில் பெட்டியின் கழிவறையில் எரிந்து கரிக்கட்டையாகிப் போன ஒரு இளைஞனின் பிணம் கிடந்தது.

காற்றில் இலையசைந்தால் கூட தீவிரவாதிகள் என்று பீதியுற்று கண் மண் தெரியாமல் சரமாரியாகச் சுடும் போலீசுச் சூரப்புலிகள் துப்புத்துலக்குவதற்கு முன்பே வழக்கமான புரளி கிளப்பிவிட்டார்கள்: ''யாராவது தற்கொலைப் படைத் தீவிரவாதியாக இருக்கலாம்!''




கடைசியில் ஒருவழியாக உண்மை தெரிய வந்தது. எரிந்து போனவர் ஒரு தற்கொலைப் படையைச் சேர்ந்தவர்தான்! ஆனால், எந்தவொரு தீவிரவாத இயக்கத்தின் தற்கொலைப் படையுமில்லை. ''வேலையில்லாத் தற்கொலைப் படை''யைச் சேர்ந்தவர்! கோவைப் பகுதியைச் சேர்ந்த பொறியியல் பட்டயப் படிப்புப் படித்த வேலையில்லா இளைஞர். சென்னை பூவிருந்தவல்லி அருகே உள்ள தனியார் நிறுவனங்களில் அடுத்தடுத்து தற்காலிக வேலை செய்து விரட்டப்பட்டவர். வாழ்க்கையில் வெறுப்படைந்து வீடு திரும்பும் வழியில் தற்கொலை செய்து கொண்டார்.

''2012-இல் இந்த நாட்டில் நாற்பது கோடிப்பேர் வேலை தேடி அலைவார்கள். தனியார்துறையும் அரசுத்துறையும் சேர்ந்து ஒரு ஆறுகோடிப் பேருக்குத்தான் வேலை தர முடியும்'' என்று எச்சரிக்கிறார் டாடா நிறுவனத்தின் இயக்குநர். இந்த எச்சரிக்கையின் எதார்த்த விளைவை நேரிலே அனுபவித்தவன்தான் தன்னைத்தானே கொளுத்திக் கொண்ட அந்த இளைஞன்.

ஆனால், நாட்டின் முதன்மைக் கோமாளி அப்துல் கலாம், மாணவர்கள் - இளைஞர்களைப் பார்த்துச் சொல்கிறார், ''கனவு காணுங்கள்! 2020-இல் இந்த நாடு ஒரு மேல்நிலை வல்லரசாகிவிடும்!''

அந்த இளைஞன் கண்ணை மூடினாலும் சரி, திறந்தாலும் சரி இருண்ட எதிர்காலமே தெரிந்திருக்கிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் தோல்விகளும் தொடர்ந்த வெறுப்புமே அவர் சாவைத் தழுவிக் கொண்டதற்கான காரணங்கள். தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்கிற சூத்திரம் அதிகாரபூர்வமாகச் செயல்படுத்தத் தொடங்கி 15 ஆண்டுகளாகி விட்டன. இருந்தும் இதுதான் நிலைமை.

மனித முகங் கொண்ட சீர்திருத்தம், அடையாளம் கண்டு பிடிக்க முடியாத அளவு எரிந்து கரிக்கட்டைகளாகிப் போகும் முகங்களைக் கொண்டவர்களாக மனிதர்களை மாற்றிக் கொண்டிருக்கிறது!

• சிவராஜ்


படிப்பகம்

www.padippakam.com




குடிநீரினால் பரவும் நோய்கள் என காலரா, டைபாய்டு போன்ற நோய்களைப் பற்றித்தான் நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட நோய்கள் வந்தால், தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கச் சொல்கிறது அரசு! விஞ்ஞானபூர்வமானது என்றாலும், இதனுடைய நடைமுறைச் சாத்தியம் பற்றி, குறிப்பாக அன்றாடம் பிழைப்பிற்கே அல்லற்படும் மக்களின் சாத்தியமின்மை பற்றி, 'அறிவுள்ள' எவரும் புரிந்து கொள்ள முடியும். கடந்த நவம்பரில் சென்னையில் ஏற்பட்ட காலரா ஏன் அடையாறைத் தாக்காமல், வடசென்னையைத் தாக்கியது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தால் வேறு சான்றுகள் ஏதும் தேவையில்லை இதற்கு.

'ஏரிகளிலும், ஆறுகளிலும் பெறப்பட்ட, உள்ளாட்சி அமைப்புகள் வாங்கும் குடிநீரில், மலம், கழிநீர் கலந்திருக்கலாம்; ஆனால், கேனித் தண்ணீர் சுத்தமானது' எனக் கருதுகிறோம் நாம். நமது தரநிர்ணயமோ, பருப்பு வேக எடுக்கும் கால அளவும், சுவையில் ஏற்படும் மாறுபாடும், சோப்பில் வரும் நுரை அளவும் தான். இவற்றில் ஏதாவது ஒன்று குறைந்தாலும், நெல்லிக்கட்டை, தேத்தங் கொட்டை மற்றும் படிகாரத்தின் மூலம் பரிகாரம் தேடுகிறோம்.

குடிக்க இயலாத தண்ணீரைக் கொண்டு சமைக்கலாம்; அதுவும் முடியாவிட்டால், குளிக்கப் பயன்படுத்தலாம்; முடியாதபோது, கழிவறைகளில் பயன்படுத்தலாம்... என்ற தரநிர்ணயத்தை நாம் வைத்துள்ளோம். தண்ணீரால் முடி உதிரும் என்ற பயத்தினால், கழுத்துக்குக் கீழே குளிக்கப் பயன்படுத்துகிறோம். ''தமிழகத்தின் பயன்பாட்டிலுள்ள நிலத்தடி நீரில், 28% பயன்படுத்தத் தக்கதல்ல'' என்கிறது அரசு. நமது தரமோ, பருப்பு வெந்துவிட்டதா எனப் பார்ப்பதில்தான் உள்ளது.

கடந்த பத்தாண்டுகளில், தேனி உள்ளிட்ட 5 இந்திய மாவட்டங்களில் பிறக்கும் குழந்தைகளின் அறிவுத்திறன் குறைவாக உள்ளது என்கிறது 'ப்சுமை அமைதி' அறக்கட்டளைகள் ஆய்வு. கேரளாவின் 'கோகோ கோலா'வை எதிர்த்த பிளாச்சிமடா பகுதிகளில் பிறக்கும் குழந்தைகளின் எடை 200 கிராம் குறைவாக இருப்பதாகச் சொல்லுகிறார் வி.டி. பத்மநாபன். (ஆதாரம்: அங்கன்வாடிக் குறிப்பேடு) இதற்குக் காரணம் நிலத்தடிநீரின் குறைவும், தரமின்மையும் என்கிறது ஆய்வு.

குமரி மாவட்டத்தின் ஆவரைக் குளம் பகுதியில் மக்களுக்கு வரும் பல் மேற்புறக் கறைகளுக்குக் காரணமான, புளூரைடு அதிக அளவில் தண்ணீரில் இருப்பதோ, 'இந்துஸ்தான் லீவரி'ன் பாண்ட்ஸ் வெப்பநிலைமானி தயாரிக்கும் நிறுவனத்தால் ஏற்படும் 'மினமேட்டா' நோய் பற்றிய அறிவோ மக்களுக்குத் தெரியப்படுத்துவது இல்லை. இத்தகைய அறிவியலை மக்கள் தெரிந்து கொண்டாலும், உடனே செய்யக்கூடியது ஏதுமில்லை என்பது ஒரு புறமிருக்கட்டும்.

''பிறப்பால் தீர்மானிக்கப்படுகிறது அறிவு'' என்கிறது பார்ப்பனீயம். தேனி மாவட்டத்தின் நிலைமையைப் பாருங்கள்! 'அறிவியல்பூர்வமாக' அரங்கேறும் இந்த மனுநீதி, வர்க்க வேறுபாட்டால் தீர்மானிக்கப்படுகிறது. இத்தகைய நவீன தீண்டாமையை அரங்கேற்றிய அரசும், முதலாளிகளும், அறிவியலை மக்களுக்குத் தூரமாகவே வைக்கின்றனர், பார்ப்பனீயம் கல்வியைத் தூரமாக வைத்ததைப் போல!

விஞ்ஞானக் கண்ணோட்டத்தை மக்களுக்கு வழங்க மறுத்த அரசால், தண்ணீர் மாசுபட்டதால் ஏற்பட்ட விளைவுகளை, மறைக்க முடியவில்லை. நிலத்தடிநீரைச் சூறையாடிய தொழிற்சாலைகளும், நவீன 'பசுமைப் புரட்சி' விவசாயமும் பாதித்த அளவிற்கு, இயல்பான நுகர்வால் ஏற்படும் நிலத்தடி நீர் குறைவும், அதனுடைய பாதிப்புகளும், நமக்குக் கற்பிக்கப்படவில்லை.

குடிதண்ணீரில், திடப்பொருள் கலப்பு (TDS) லிட்டருக்கு 500 மிகி முதல் 1500 மிகி வரை இருக்கலாம் என்கிறது உலக சுகாதார நிறுவனம் (WHO). ''எனக்கு உடம்பு எரிகிறது; ஏதாவது பண்ணுங்கண்ணே!'' என்று ஆண்டுக்கணக்கில் கதறும் செல்வராணி என்ற சிறுமியின் உடலைப் பதம் பார்த்து, புவியுடலையும் பதம்பார்த்த ஒரத்துப்பாளையம் அணையில், திடப்பொருள் கலப்பு 6000 மி.கி. என்கிறார், ஈரோடு மாவட்ட ஆட்சியர்.

கல்லீரலையும் நுரையீரலையும் சமமாகப் பாதிக்கும் 'ஆல்டிரினு'ம், மரபணுக்களைச் சேதமாக்கி, நரம்பு மண்டலத்தை நிர்மூலமாக்கி, மார்புப் புற்று நோய், திசுவளர்ச்சியின்மை மற்றும் இனப்பெருக்கத் தடைக்குக் காரணமானதும், உலக அளவில் தடைசெய்யப்பட்டதுமான டிடிடி மற்றும் என்டோசல்ஃபான் போன்ற உயிர்க் கொல்லிகளும் நிறைந்த அந்த அணைத் தண்ணீரைச் சுமக்கும் பூமி 77 கிராமங்களில் வண்ணக்கலவையான நிலத்தடி நீரை உருவாக்குகிறது. பூமியின் உள்ளேயும், ஒரத்துப்பாளையம் அணை ஒன்று இருக்கிறது. 1200 அடிக்குக் கீழேதான் 'பெர்ரஸ் அயனி' என்ற இரும்புத் துகள் கலக்காத, தெளிவான ஆனால் கடின நீராகக்

**கடந்த பத்தாண்டுகளில் தேனி உட்பட 5 இந்திய மாவட்டங்களில் பிறக்கும் குழந்தைகளின் அறிவுத்திறன் குறைவாக உள்ளது. காரணம் நிலத்தடி நீரின் தரமின்மை. 'அறிவியல்பூர்வமாக' அரங்கேறும் இந்த மனுநீதி வர்க்க வேறுபாட்டால் தீர்மானிக்கப்படுகிறது.**


படிப்பகம்

www.padippakam.com

கிடைக்கிறது. அது குடிக்கப் பயன்படாது.


திருப்பூர் சாயப்பட்டறை முதலாளிகளின் வண்ணக் கனவுகளுக்கு, அப்பகுதி இளைஞர்கள் தந்த விலை, ஆண்மை இழப்பு! சாயக் கழிவுநீரால் நிரம்பிய ஒரத்துப்பாளையம் அணை திறந்து விடப்பட்டபொழுது, மீன்கள் கூட செத்து மிதந்தன. தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கச் சொன்னது அரசு. அந்த நீரை, கழுத்துக்குக் கீழேயாவது ஊற்றிக் குளிப்பார்களா ஆட்சியாளர்கள்? பத்துநிமிடக் குளியலுக்கு ஆட்சியாளர்கள் தயாராகவில்லையென்றாலும் இந்த வன்முறையைப் பதினைந்து ஆண்டுகளாகத் தாங்கி நிற்கிறது நிலம்.

சேலத்திற்கு தண்ணீர் தந்த சேர்வராயன் மலையின் நீரூற்றுகளை தனது சிவப்பு மணல் கழிவுகளால் மூடிவருகிறது 'மால்கோ' நிறுவனம். 'அலுமினியம்' தயாரிக்கப் பயன்படும் 'பாக்சைட்' என்ற மூலப்பொருளால் மூடப்பட்ட மலைக்குன்றுகளையே காணாமல் செய்த நிறுவனம் அது. குடிக்கத் தண்ணீர் இல்லாத சேலத்தில் இந்த ஆண்டு மாம்பழ விளைச்சலும் குறைந்தது. 'மல்கோவா'வை, 'மால்கோ' வென்ற கதை இது!

பாலாற்றங்கரையின் படுகையில் வரும் சோலூர் கிராமம், ''மூன்று போகமும் நெல் விளையும் பூமி'' என்கிறது அரசு. யதார்த்தத்தில் ஏக்கருக்கு 400 கிலோ நெல் மாத்திரம்தான், அதுவும் ஒரு போகம்தான் விளைகிறது. கருப்பு நிறத்தில் கிடைக்கும் வைக்கோலை விற்க முடியாத இந்த ஊரில் தயாராகும் செங்கல்கள் கூட, சந்தையில் விலைபோவது இல்லை. தோல் தொழிற்சாலைக் கழிவுகளால் ஊற்றுக் கால்வாய்களும், கசக்கால்வாய்களும் தூர்ந்து போனதால் வந்த விளைவு இது.

உலகச் சந்தையில் தோல்தொழிலில் இந்தியச் சந்தை மதிப்பு 3% தான். 80% தோலின் கழிவுகளை பாலாற்றின் கரையில் கொட்டும் ஆம்பூர், வாணியம்பாடி, இராணிப்பேட்டை தோல் தொழிற்சாலைகள், நிலத்தடி நீரின் திடப்பொருள் கலப்பை (TDSஐ) 500-லிருந்து 1 லட்சத்திற்கு ஏற்றியிருக்கிறார்கள். நம்மிடம் பதப்படுத்தப்பட்ட தோலைப் பெற்று, 'பாலீஷ்' போட்டு, 'லேபிள்' ஒட்டுகிற வேலையைச் செய்யும் இத்தாலியின் தோல் தொழிலின் சந்தை மதிப்போ 16%.

இத்தாலியின் சந்தை விரிவதற்காக, பாலாற்றின் படுகை சுருங்கியது. குடிக்கத் தண்ணீர் இல்லாத மேலவிருச்சிகம் கிராமத்தில், கடந்த 15 ஆண்டுகளில், 200 குடும்பங்கள் நகர்ப்புறங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளன. 'சூழலியல் அகதிகள்' தண்ணீரில் மட்டுமா? தோல் தொழிற்சாலையின் கழிவு காற்றில் கலந்துள்ள குரோமேட்டால் ஆஸ்த்துமாவும், நுரையீரல் செயலிழப்பும் வேலூர் மாவட்டத்தில் பரவலாகி வருகிறது. தண்ணீருக்கு ரேசன் அட்டை காட்ட வேண்டிய நிலையும் உருவாகி வருகிறது.



**'கேணித் தண்ணீர் சுத்தமானது' எனக் கருதுகிறோம் நாம். நமது தரநிர்ணயமோ, பருப்பு வேக எடுக்கும் கால அளவும், சுவையில் ஏற்படும் மாறுபாடும், சோப்பில் வரும் நுரை அளவும்தான்.**

மரபு விவசாயத்தைச் சூறையாடி, ஆற்றுப் பாசனத்தையும், ஏரிப் பாசனத்தையும் நாசமாக்கிய 'விபீடணன்' எம்.எஸ். சுவாமிநாதன் இன்று மைய அரசின் அறிவியல் ஆலோசகர். இரண்டாவது பசுமைப்புரட்சியைத் துவக்கி இருக்கிறார்.

மறந்து விட்டதா, 'பசுமைப் புரட்சி'யும், தொடர்ந்து வந்த நிலங்களின் பல்லிளிப்பும்! குறுகிய கால நெற்பயிர், மூன்று போகம்... என்ற முதலாளியச் சந்தைக்கான உற்பத்திக்கு, 1200 அடியில் ஆழ்துளைக்கிணறுகள், 'ஆர்ட்டீஷியன் ஊற்றுக்களாக'ப் பெருக்கெடுத்தன. விளைச்சலுக்கு தேவையான தழைச்சத்தும், மணிச்சத்தும், விவசாயிகளின் தற்கொலையை அடமானமாக வைத்து, 'முத்தையா செட்டியா'ரின் உர வகைகளாக மாறின. மைய நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் செயற்கை பாஸ்பரஸ் உரங்களை பயிரோடு நிலமும் தின்றது. மருத்துவத் தொழிலும் கொழித்தது. போர்வெல் தொழிலுக்கு நிகராக தற்கொலையும் அதிகரித்தது.

ஏக்கருக்கு எட்டுக் கிணறுகள் வெட்டியாவது, போட்டதைப் பிடித்து, தொடர்ந்து உயிர்வாழ விரும்பிய சிறு விவசாயிகளுக்கு, வழிகாட்டியது 'யூரியா' போன்ற உடனடி உரங்கள். நச்சு உரங்களால் சீரழிந்த விவசாய நிலம், நிலத்தடி நீரையும், கீழே அதல பாதாளத்திற்குத் தள்ளியது. நொய்யலாற்றங் கரையில் 3.5 குதிரைத் திறனுடைய மோட்டார் 10 குதிரைத் திறனாகியது. 1200 அடிகளில் கிணறு, கம்ப்ரஷ்ஷர் பொருத்திய மோட்டாராக மாறியது.

உலகமே தடைசெய்த டிடிடி, எண்டோசல்ஃபான் போன்ற உயிர்க்கொல்லிகளின் அடைக்கலமாகுமிடம் தண்ணீரும், காற்றும் உயிருள்ள பொருட்களும்தான். இந்நச்சுக்கள் கலந்தாலே, கல்லீரலின் மேலுறையை அழித்து, திசு வளர்ச்சியை அடக்கி, விந்து மற்றும் கரு உருவாக்கத்தைத் தடை செய்து, சிறுநீரகத்தைச் செயலிழக்க வைக்கும். இவை இல்லாத உரங்கள் ஏது?

'ஹெப்டாகுளர்' கலந்த மருந்துகளோ, விவசாயத் தோழனான மண்புழுவை அழிக்கும். 'டயல்டிரின்' பயன்படுத்திய, காய்கறிகளை உண்பவர்களுக்கே, 'பார்க்கின்சன்' நோய் வருகிறது. பாலூட்டும் பழக்கமுடைய உயிர்கள் அனைத்தையும் இரத்தப் புற்றுநோயால் தாக்குகிறது 'மாலதியான்'! பிளாச்சிமடாவில் கோக் வழங்கிய மீத


படிப்பகம்

www.padippakam.com

உரத்திலிருந்த 'காட்மியம்', மூட்டு எலும்புகளைப் பாதிக்கும். 'பெனிட் ரோதையான்' எனப்படும் கரிம பாஸ் பேட் உரத்தால், கண்புரை நோயும், மைய நரம்பு மண்டலச் செயலிழப்பும் ஏற்படும். கண்ணுக்கு அறுவைச் சிகிச்சை செய்யலாம்; நரம்பு மண்டலத் திற்கு இது வரை இல்லை; ஒருவேளை வந்தாலும் அது எப்போது அரசு மருத் துவமனைக்கு வரும்?

உரங்களும், பூச்சி மருந்துகளும் நிலத்தை மாத்திரமல்ல. நீரையும், காற் றையும் நஞ்சாக்கியது இருக்கட்டும். தொடர்ந்து வரும் மனிதப் பயன்பாட்டி னால் இறங்கும் நிலத்தடிநீர் மட்டம், தோற்றுவிக்கும் அபாயங்களைப் பற்றி அறிவியலாளர்கள் கூடச் சொல்வது இல்லை.

ஹைட்ரஜன் இரண்டு பங்கும், பிராண வாயுவான ஆக்சிஜன் ஒரு பங் கும் கொண்டுள்ள நீர், பூமிக்குள்ளே பயணிக்கையில் ஆக்சிஜனை இழந்து, உயிர்ப் பொருட்களில் மீதமாகும் கார் பனுடன் இணைந்து, கார்பன்-டை-ஆக்ஸைடு என்ற மாசுபட்ட வாயுவாக மாறுகிறது. இவ்வாயுவைத் தண்ணீரு டன் கலப்பதுதான் சோடா தயாரிக்கும் கம்பெனிகளின் 'ஃபார்முலா'. கார்பனுடன் கலந்து விளைபொருளாகக் கிடைக்கும் கார்பானிக் அமி லமாக மாறுகிறது நிலத்தடிநீர். கோக்க கோலாவில் இவ்வமி லத்தின் அடர்த்தி அதிகமாக இருக்கும்.

தண்ணீரில் காரமும், அமி லமும் சம அளவில் இருக்க வேண்டும். அதனைக் குறிக் கும் அறிவியல் குறியீட்டு எண் PH ஆகும். PH-ன் மதிப்பு 7-ஐ விடக் குறைவாக இருந்தால் அமிலம் என்றும், அதிகமானால் காரம் என்றும் குறிப்பிடுகிறார்கள் விஞ்ஞா னிகள். இவ்விரு எதிர்மறை கள்தான் பொருட்களின் பண் பினைத் தீர்மானிக்கிறது.


நீங்கள் அருந்தும் கோக் மற்றும் பெப்சியில் PH மதிப்பு 2.5 தான்; அதாவது கார்பானிக் அமிலம் அதிக மாக இருக்கிறது. எனவே தான் கால்சியம் கலந்த எலும்பு அல்லது பற்களை இதில் போட்டால் கரைந்து விடுகின்றன. எனவேதான் இக்குளிர்பான கழிவுகள், அல்சர், வயிற்றுப் பிரச்சினை போன்றவற்றுக்கும், சிறுநீரகக் கற்க ளின் உருவாக்கத்திற்கும் காரண மாகின்றன.

சில நூறு அடி ஆழத்தில் கிடைக் கும் தண்ணீர் மட்டும் தரமானது என்று கூற முடியாது. அதில் கலந்துள்ள உலோகங்கள் மற்றும் அதனால் தீர்மா னிக்கப்படும் தண்ணீரின் மின்சாரத் தைக் கடத்தும் திறனையும் பொறுத்தது அது. தமிழ்நாட்டு நிலத்தடி நீரின் 'மின் கடத்தும் திறன்' 5 மடங்கு அதிகமாக உள்ளது. தண்ணீரின் கடினத் தன்மைக்கு இது தெளிவான சான்று.

இதற்குக் காரணமான கால்சியமும், மெக்னீசியமும் கடைசி கடினப்பாறை களிலும், ஏனையவை அதற்கு மேலே உள்ள பாறை அடுக்குகளிலும் விரவி உள்ளது. இவையிரண்டும்தான் சிறுநீர கக் கற்களை உருவாக்கும்.

ஆனால் இதனுடைய சுவை மாற் றம் லிட்டருக்கு 1000 மி.கி கலக்கும் வரை தெரியாது. சமையல் உப்பான சோடியம் குளோரைடோ, லிட்டருக்கு 200 மிகி கலந்தாலே சுவை காட்டிக் கொடுத்து விடும். எனவே, சுவையைப் பொறுத்து கால்சியமா குளோரைடா என அறிய முடியாது.

**சில நூறு அடி ஆழத்தில் கிடைக்கும் தண்ணீர் மட்டும் தரமானது என்று கூற முடியாது. நிலத்தடி நீரின் மட்டம் குறைந்தால், அது நீராகவே தொடர்ந்து இருப்பதற்கான ஆக்சிஜன் தேவை அதிகரிக்கும். அதிகமானால், அமிலமாக மாறுகிறது நீர்.**



நிலத்தடி நீரின் மட்டம் குறைந்தால், அது நீராகவே தொடர்ந்து இருப்பதற் கான ஆக்சிஜன் தேவை (DO) அதிகரிக் கும். DO அதிகமானால், அமிலமாக மாறுகிறது நீர். உயிர்வாழத் தேவை யான ஆக்சிஜனின் தேவை (BOD) அதி கரிப்பு, தேங்கிய நீர்நிலைகளில் அதி கம். BOD-ன் அளவு அதிகமானால், மீன்கள், நண்டுகள், ஏன் நத்தைகள் கூட செத்து மிதக்கும்.

கடின உலோகக் கலப்பினால் ஏற் படும் மங்கலான தண்ணீரை, பிளீச்சிங் பவுடர் போட்டுத் தூய்மைப்படுத்தச் சொல்கிறது அரசு. தோல் தொழிற்சா லைகள் வெளியிடும் வாயுக்கழிவான குரோமே IV-இலிருந்து எப்படித் தப் பிப்பது? காற்றை வடிகட்டிச் சுவாசிக்க வேண்டுமோ!

ஞாபக மறதியும், காக்காய் வலிப் பும் பரம்பரை நோய்கள் என நம்புகி றோம். ஓரளவு அதில் உண்மையும் இருக்கிறது. ஆனால் இந்நோய்க ளுக்குக் காரணமான 'டெட்ரா எத்தில் காரீயம்', தமிழக நிலத்தடி நீரில், மில்லியனில் 0.1 பங் கிற்குப் பதில் 0.5 பங்காக உள்ளது என்பதை ஏன் அரசு மக்களுக்குச் சொல்ல வில்லை?

கிணறுகள் தோண்டும் போதும், போர்வெல் போடும்போதும், மக்கள் ஜோதிடம் பார்த்துத்தான் இடத்தைத் தேர்வு செய்கின்ற னர். தண்ணீர் சரியாக அமை யாவிட்டால், 'சகுனம் சரி யில்லை' என்ற நொண்டிச் சாக்கில் தலைவிதியான ராசி யின் பலாபலன்களைப் பற் றிய நம்பிக்கையும் அவர்க ளைச் சமாதானப்படுத்துகின் றன. அப்படியும் சமாதானம் ஏற்படாத, ஏக்கருக்கு எட்டு கிணறு அடித்த கடனாளி விவ சாயிகள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

நிலத்தடி நீரைக் கண்ட றிந்து சொல்வதொன்றும் மர் மமான, மூடநம்பிக்கை யல்ல! அந்த விஞ்ஞான வழி முறைக்கான கருவிகள் அரசி டம் இல்லாமலும் இல்லை! ரத்தன் டாடாவின், தமிழகத் தண்ணீர் விற்பனைக்கு, வழி சொல்லுகிறார்கள் அண்ணா பல்கலைக்கழக விஞ்ஞானி


படிப்பகம்

www.padippakam.com

கள். கங்கை கொண்டானின் தரமான செம்பூத்துத் தண்ணீரை 'கோக்'கிற்கு அடையாளம் காட்டுகிறார்கள் நிலத்தடிநீர் வல்லுனர்கள்.

அரசு இயந்திரம், நல்ல தண்ணீரின் இருப்பிடத்தையும் தரத்தையும் கண்டறிந்து சொல்லியிருந்தால், ஏக்கருக்கு எட்டு போர் போட்டுத் தண்ணீரைத் தேடி, தற்கொலையில் முடிவு பெறும் விவசாயிகளில் சிலரின் உயிரையாவது காப்பாற்றியிருக்கலாம்.

மக்களுடைய கண்ணீரின் கரிப்பு அரசுக்கு என்றுமே உரைத்ததில்லை. போபால் படுகொலை முடிந்து 20 ஆண்டுகள் ஆகியும் மக்களுக்கு நட்ட ஈடு கிடைக்கவில்லை. ஆனால் யூனியன் கார்பைடு வெளியிட்ட நஞ்சு, போபால் தாய்மார்களின் மார்பகங்கள் வழியே புற்று நோயைக் குழந்தைகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

உத்திரப் பிரதேசத்தின் பாலியா மாவட்ட நிலத்தடிநீரில் இருபது மடங்கு அதிகமாக 'ஆர்சனிக்' எனும் கொடிய நஞ்சு இருக்கிறது. இந்த உண்மையை 'அறிவியல் செய்தி'யாக வெளியிட்ட 'டவுன் டு எர்த்' என்ற இதழின் ஆசிரியருக்கு அபராதம் விதித்திருக்கிறது அந்த மாவட்ட நீதிமன்றம்.

ராஜஸ்தான் நீதிமன்றமோ கொக்கோ கோலாவிடம் கெஞ்சுகிறது. "உங்கள் குளிர்பானத்திலும் தண்ணீரிலும் கலந்துள்ள உயிர்க் கொல்லி மருந்துகளின் அளவையாவது பாட்டிலின் மீது குறிப்பிடுங்கள்" என்கிறது. கோக் நிறுவனமோ "அது எங்கள் தொழில் ரகசியம்" என்று கூறி தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கிறது. பார்ப்பனியத்திற்குப் பூணூல்! முதலாளி வர்க்கத்திற்கு 'தொழில் ரகசியம்'!

இது புதியவகை மனுநீதி. ஆல்ப்ஸ் மலையின் நீரூற்றுத் தண்ணீரைப் பிடித்துப் பாட்டிலில் அடைத்து விற்கிறது 'ஏவியான்' - விலை ஒரு லிட்டர் 750 ரூபாய். இது நட்சத்திர விடுதிகளுக்கே உரியது. கண்ணாடிக் கேனில் கின்லே - இதன் விலை 70 ரூபாய்; வெள்ளைக் கேன் தண்ணீர் 30 ரூபாய்; மாநகராட்சியின் கறுப்பு நிற சின்டெக்ஸ் தொட்டி - மக்களுக்கு.

இதற்கும் கீழே 1000, 2000 அடி பாதாளத்திலிருந்து சவர்த் தண்ணியும் சப்பைத் தண்ணியும் கதியற்ற மக்களுக்கு. ஆல்ப்ஸ் முதல் அதல பாதாளம் வரை - இது தண்ணீரால் எழுதப்பட்டிருக்கும் புதிய மனுநீதி!

• தளபதி

# பாட்டில் தண்ணீர் மகாத்மியம்!

பாட்டில் நீரும், கேன் தண்ணீரும் வாங்கிக் குடிக்கும் படித்த வர்க்கத்தினர், காசு கொடுத்து வாங்குவதன் காரணமாகவே அது தரமான நீர் என்று நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஐரோப்பாவில் குடிநீரின் தரநிர்ணயத்துக்கு 56 காரணிகளை வைத்துள்ளனர். உலக சுகாதார நிறுவனம் கூறுவது 40 காரணிகள். நம் நாட்டுக்கு பன்னாட்டு பாட்டில் கம்பெனிகள் நிர்ணயித்துள்ளவை வெறும் 16 காரணிகள். "குடிக்கத்தக்க நீரெல்லாம் குடிநீரே" என்கிறது நம் அரசு.

அதாவது இதற்கு சட்டரீதியான தரநிர்ணயம், கட்டுப்பாடு எதுவும் இதுவரை கிடையாது. அதாவது, பாட்டில் தண்ணீரைக் கொண்டு போய் அரசின் ஆய்வு நிலையத்தில் கொடுத்தால், "இதில் பூச்சி மருந்தும், இரசாயனப் பொருட்களும் எவ்வளவு உள்ளது" என்பதைக் கூறுவார்கள். ஆனால் "இன்ன அளவுக்கு மேல் இரசாயனப் பொருள் கலந்த நீரை விற்கக் கூடாது" என்றும் கூறும் சட்டம் எதுவும் கிடையாது என்பதே நிலை.

தங்களுடைய தண்ணீர் ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் முறையில் சுத்திகரிக்கப்படுவதாக பல நிறுவனங்கள் கூறுகின்றன. இம்முறையில் குளோரினை அகற்ற முடியாது. மைக்ரோ மற்றும் அல்ட்ரா சுத்திகரிப்பு முறைகளில் தண்ணீரில் உள்ள கிருமிகளுடன் சேர்ந்து நன்மை செய்யும் பாக்டீரியாக்களும் செத்து விடுவதால் அந்தத் தண்ணீர் சவத்துக்குச் சமம். செலவு அதிகம் பிடிக்கும் 'நேனோ' சுத்திகரிப்பு முறையை யாரும் செய்வதில்லை.

வேதியல் முறைகளில் சுத்திகரிப்பு செய்யாமல், திறந்த தூய்மையான நீர்நிலைகளிலிருந்து தண்ணீரை எடுத்து, அதை லாரியில் ஏற்றாமல், அங்கேயே அப்படியே பாட்டிலில் அடைத்துக் கொண்டு வருவதாகச் சொல்கிறது ஏவியான் எனும் நிறுவனம். ஒரு லிட்டர் தண்ணீரின் விலை 750 ரூபாய். நம்மூர் நட்சத்திர விடுதிகளில் மட்டுமே இது புழங்குகிறது.

மற்ற கின்லே, அக்வாஃபினா முதலான தண்ணீர் அனைத்தும் 500 அடி 1000 அடி போர் போட்டு எடுக்கப்படுபவைதான். "உங்கள் ஊர் தண்ணீரில் பூச்சி மருந்தும் இரசாயனமும் இருந்தால் அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்று உச்சநீதி மன்றத்தில் கோக்கும் பெப்சியும் வாதாடி வருகின்றன. எனவே, "IS 14543:1998" என்று எண்களை அச்சிட்டு அவர்கள் காட்டுவது வெறும் ஜிகினா வேலை. அவ்வளவுதான்.

அக்வாஃபினாவில் மரபணுக்களை பாதிக்கும் டைமெத்தோ பேட் உலகளவில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட 13 மடங்கு அதிகமாக உள்ளது; ஞாபகமறதி நோயைத் தோற்றுவிக்கும் 'குளோரோபைரோபஸ்' வோல்கா மற்றும் மெக்டோவல் தண்ணீரில் (தண்ணியிலல்ல) உள்ளது.

புற்று நோய் மனச்சிதைவு மற்றும் கண் பார்வையைப் பாதிக்கும் 'மாலதியான்' பிஸ்லரியில் 400 மடங்கு உள்ளது. கல்லீரல் பாதிப்பு, மார்பக, இரத்த புற்றுநோயை உருவாக்கும் 'லிண்டேன்', 45 மடங்கு அதிகமாக 'ஹலோ' தண்ணீரில் உள்ளது. லிண்டேனுக்குரிய அத்தனை பாதிப்புகளையும் உருவாக்கும் டி.டி.டி. மற்றும் மேனோகுரோட்டோபாஸ் போன்றவை 70% பாட்டில் தண்ணீர்களில் நிறைந்துள்ளது.

இவையனைத்தும் சூழலியல் அமைப்புகள் நடத்திய சோதனைச் சாலை ஆய்வுகளின் முடிவுகள். இலவசமாகக் கிடைக்கும் நீரை காசுக்கு விற்கும் இந்தக் கயவர்கள், குறைந்தபட்சம் அதைச் சுத்திகரித்துத் தருவதற்குக் கூடப் பொறுப்பேற்பதில்லை. மாறாக, கார்ப்பரேசன் தண்ணீரையே பாட்டிலில் அடைத்து 'தசானி' என்று பெயரிட்டு விற்ற கோக் பிரிட்டனில் பிடிபட்டு விற்பனையையே நிறுத்தியது. அமெரிக்காவிலும் இதே கதைதான்.

இங்கேயோ கேட்கவே வேண்டாம். "300% அதிகமான ஆக்ஸிஜன் கலந்த நீர்" என்று தனது தண்ணீருக்கு விளம்பரம் செய்கிறது மாணிக்சந்த் குட்கா கம்பெனி. ஆனால், "தண்ணீரின் இயல்பான அளவைவிட அதிக ஆக்ஸிஜனை கரைக்கும் முயற்சி தோல்வியடைந்து விட்டதாக" ஒப்புக் கொள்கிறது, தண்ணீர் வியாபாரிகளின் இணையத்தளம்.

பழுத்துப் போன வெள்ளைச் சட்டைக்கு சொட்டு நீலம் போடுவது போல, பாட்டிலுக்கு நீல நிறம் ஏற்றி தண்ணீரைப் 'பளிச்சிட' வைத்து படித்த வர்க்கத்தின் பாக்கெட்டை குறையாடுகிறார்கள் இந்த எத்தர்கள்.

"அப்புறம் பானைத் தண்ணீருக்கும் பாட்டில் தண்ணீருக்கும் என்ன தான் வித்தியாசம்?" என்று கேட்கிறீர்களா? வித்தியாசம் - 13 ரூபாய்!

www.padippakam.com

# நீரில் வணிகம்
# 'நீர் இல்' துயரம்

பத்துக்கு பத்து குடித்தனத்தில் பெத்தபிள்ளை அருகே வந்தாலும் ''ச்சே போ அந்தாண்ட கசகசங்குது நீ வேற'' என்று காயும் பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் அண்ணா டவரின் உயரத்தில் இடைவிடாது வரும் காற்று, கொஞ்சலையும் நெருக்கத்தையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

ஒரு சிறுமி பக்கத்திலுள்ள சிறுவனைப் பார்த்து, ''டேய் அங்க பாருடா, பச்சப்பசேல்னு அழகா இருக்குல்ல!'' ''ஏ இங்க பாரு கலர் கலரா பூவெல்லாம் சூப்பரா தெரியுது!'' ''எவ்ளோ மரம் அழகா இருக்குல்ல!'' பூமியைப் பார்க்கப் பார்க்க இயற்கையின் மீதான பிள்ளைகளின் பாசமும் பரந்து விரிந்தது. இயற்கையின் மீது வைக்கும் அன்பு உயிர்கள் அனைத்துக்குமானது என்பதை குழந்தைகளின் உணர்ச்சி குறிப்பாய் உணர்த்திக் கொண்டிருக்க பக்கத்தில் செருப்பிலிருந்து சட்டை வரை வெள்ளையாக இருந்த இருவரில் ஒருவன் ''அந்த ஹன்ட்ரட் ஃபீட் ரோட்டோரமா அடர்த்தியா மரமா இருக்கு பாருங்க. அந்த லொகேஷனை தட்டிவிட்டு பிளாட் போட்டோம்னு வச்சுக்குங்க இப்ப உள்ள சூழ்நிலைக்கு ரேட்டு எகிறும்'' என்று உயரத்தில் இருந்து ஒவ்வொரு இடமாய் வெறித்துக் கொண்டிருந்தனர்.

இயற்கையைக் கூட இயற்கையாகப் பார்க்கத் தெரியாத இந்த வணிக மிருகங்களைப் பார்த்தபோது தூக்கி வாரிப் போட்டது எனக்கு. பன்னெடுங் காலமாக இயற்கை அம்சங்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற மனிதகுலத்தின் முயற்சியும், விருப்பமும குழந்தைகளின் உணர்ச்சியில் வெளிப்படுகிறது. ஆனால் வளர்ந்த பெரியவர்கள் என்பவர்களிடம் மனிதன் உட்பட இயற்கை அனைத்தையும் வெறும் பண்டமாக, லாபம் தரும் உற்பத்திக் கருவியாக மட்டும் பார்க்கும் முதலாளித்துவ வணிகவெறி அல்லவா வக்கிரமாக வெளிப்படுகிறது. குழந்தையிடம் உள்ள நாகரிகம் வளர்ந்தவனிடம் இல்லையே?

எவ்வளவுதான் பழங்காலமாக இருந்தாலும் அனைவருக்குமான இயற்கை வளங்களைப் பொதுவில் வைத்துப் போற்றிப் பாதுகாத்த மனித குலத்தின் மகத்தான உணர்ச்சிகளை நாம் கைக்கொள்ள வேண்டும். எவ்வளவுதான் நவீனமாக இருந்தாலும் இயற்கையை வெறும் லாபம் ஈட்டும் பண்டமாகப் பார்க்கும் முதலாளித்துவ வணிகவெறியை ஒழித்துக் கட்ட வேண்டும். வெறும் பண்ட உற்பத்தியும், கருவிகளும் மட்டுமா முன்னேற்றம்? முன்னேற்றம் என்ற பெயரில் நடக்கும் இந்த முதலாளித்துவ வணிகச் சுரண்டலால் நாம் பெற்றதைவிடவும், இழந்தது அதிகம்.

இயற்கை மனிதனைப் பெற்றெடுத்தது, மனிதன் இயற்கையின் மீது வினையாற்றி, தனது வாழ்நிலைக்கேற்ற மனித இயற்கையை உருவாக்கினான். இருக்கின்ற தண்ணீரைத் தோட்டத்தில் பாய்ச்சி, பாத்தியில் தேக்கி இன்னுமொரு இயற்கையை விளைவித்தான். ஆனாலும் மலையும், காடும் பொது வளங்களாகப் போற்றப்பட்டன.

எந்தத் தனிமனிதனும் உற்பத்தி செய்யாத இயற்கை வளங்களை காட்டையும், மலையையும், ஆற்றையும், ஏரியையும், குளத்தையும் இன்று தனி ஒரு முதலாளிக்கு சொந்தமாக்கி அதை எவ்வளவு வேண்டுமானாலும், இயற்கையே இற்றுப் போகும்படி விற்றுக் காசாக்கும் வெறியோடு முதலாளித்துவம் அலைவதையா முன்னேற்றம் என்பது?

''இயற்கை தாய்; மனித உழைப்பு தந்தை'' என்று கூறிய ஓர் அறிஞரை ஆமோதித்து மேற்கோள் காட்டுகிறார் மார்க்ஸ். அத்தகைய தண்ணீரையே வெறும் சரக்காக மாற்றி, தனியுடைமையாக்கும், மொத்த இயற்கைக்கும் எதிரான முதலாளித்துவ வெறியுணர்ச்சியை, காலங்காலமாக இயற்கையைப் பொதுவாக்கி, போற்றிப் பாதுகாத்த நம் முன்னோர்களின் உணர்ச்சியிலிருந்து முன்னேறி, தாக்கி தகர்க்க வேண்டிய 'இயற்கையான' உணர்ச்சி கூட நமக்கு எழாதா என்ன?

தண்ணீர் இயற்கைக்கே உணவு; தண்ணீரை எந்த முதலாளி உருவாக்கினான், அதைத் தனியுடைமையாக்கிக் காசாக்க? ஈரப்பசை இழையோடும் பழைய இலக்கியமெங்கும் கவிஞர்கள் தண்ணீரை பாட்டில் முகந்து மனித உணர்ச்சிகளைப் பறைசாற்றியிருக்கின்றனர். பாட்டிலில் அடைத்து அதனைக் காசாக்கும் வணிக வெறி அவர்களுக்கு வந்ததில்லை. 'அறிவு' வளராத காலமல்லவா அது!

பசி என்று வந்தவர்களுக்குச் சோறும் தண்ணீரும் தருவதே உயர்ந்த அறம் என்று *''சோறிடும் தண்ணீரும் வாரும் / ஆறு தருமமே சார்பாக உண்ணீர்மை வீறும் உயர்ந்து''* என்கிறது நல்வழி. ''காசுக்கு மட்டுமே இனி தண்ணீர்'' என்ற பண்பாட்டுக்கு மாறச் சொல்லி தாமிரவருணிக் கரையில் குழாயை இறக்கி விடுகிறது 'கோக்' கம்பெனி. ''ஆறுகெட நாணல் இடு; ஊருகெட நூலை இடு'' என்பது பழமொழி. நம் பூமியே கெட ஆறு குளமெங்கும் குழாயை இறக்கிக் கொண்டிருக்கிறார்கள் தண்ணீர்க் கொள்ளையர்கள்.

தண்ணீர் தனியார்மயமானால் இயற்கையின் இயல்பு மட்டுமல்ல மனிதர்களின் இயல்பும் கெடும்; கெட்டும் விட்டது. ஒரு குடம் தண்ணீரை யாரும் மாற்றி எடுத்துப் போய்விட்டால் ''உன் ஆயி, ஆத்தா, அப்பன், ஊர்மேல...'' என்று குழாயடியே பண்பாட்டுக் கொலைக்களமாக மாறுகிறது; ஒரு குடம் தண்ணீருக்காக திருச்சியில் ஒரு கொலையே விழுந்தது.


நீர்வளம் பெருக்கி, ஊர்வளம் காக்காது தான் மட்டும் சொகுசாய் வாழ்ந்த மன்னன் நெடுங்கிள்ளி என்பவனைப் பார்த்து கோவூர்கிழார் என்ற புலவர் *''பால் இல் குழவி அலறவும் / மகளிர்*

**ஈரப்பசை இழையோடும் பழைய இலக்கியமெங்கும் கவிஞர்கள் தண்ணீரைப் பாட்டில் முகந்து மனித உணர்ச்சிகளைப் பறைசாற்றியிருக்கின்றனர். பாட்டிலில் அடைத்து அதனைக் காசாக்கும் வணிக வெறி அவர்களுக்கு வந்ததில்லை. 'அறிவு' வளராத காலமல்லவா அது!**

www.padippakam.com

*பூவில் வறுந்தலை முடிப்பவும் / நீர் இல் வினை புனை நல் இல்... / இன்னாது அம்ம! ஈக்கு இனிது இருத்தல்!''* என்று மக்கள் பலவாறு வருத்தப்படும் போது நீ மட்டும் இன்பமாக இருப்பது உனக்கு வெட்கமாயில்லையா என 2000 ஆண்டுகளுக்கு முன்பே கேட்டார்.

இன்றும் தமிழகத்துப் பெண்கள் பாலுக்கு அழும் குழந்தைகளை அலற விட்டு காலிக் குடத்தோடு அலையும் போது தாய்மார்களின் 'நீர்இல்' துயரம் போக்காமல் கோக் கம்பெனிக்குக் குழாய் போட்டுக் கொடுத்து காசுக்கு தண்ணீரை விற்கச் சொல்லும் காரிகை ஜெயலலிதாவைப் பார்த்து ''உனக்கு வெட்கமில்லையா?'' என்று எந்த ஊர் கிழார் கவிபாடுகிறான்?



குடத்துக்குப் பெண்கள் காவல்
'கோக்'குக்கு போலீசு காவல்

பக்தி மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இயற்கை பட்டினி கிடப்பதைப் பார்த்து *''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்''* என்றார் வள்ளலார். *''வானம் சுருங்கின் தானம் சுருங்கும்''* என்றார் அவ்வையார். *''பன்னெடுங் காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டாகும்''* என்று மழையை வேண்டினார் அப்பர். பன்னாட்டுக் கம்பெனிகளிடம் ஒரு 'மார்க்கமாக' ஒதுங்கி விட்ட இந்திய நீதிமன்றங்களோ கேரள பிளாச்சிமடாவில் ஊரே பட்டுப் போனாலும் நிலத்தடி நீரை உறிஞ்சுவது கோக்கின் உரிமை என்று இயற்கையை அழிக்க 'உரிமை'ப் பண்பாடுகின்றன.

பக்தி மார்க்கமானாலும் பயிருக்கு நீர் கேட்கும் பரிவுணர்ச்சி எங்கே? உன் உயிருக்கே கேடானாலும் உறிஞ்சிக் காசாக்குவதை விடமாட்டேன் எனும் பன்னாட்டுக் கம்பெனிகளின் வெறியுணர்ச்சி எங்கே? மூடநம்பிக்கையை விடவும் மோசமானது முதலாளித்துவ நம்பிக்கை. மாறாக, இயற்கையைப் போற்றிப் பாதுகாக்கும் பண்பாட்டு மரபுகளைக் கைக்கொள்ள வேண்டும். இயற்கையை ரசித்த, இயற்கை வளங்களை வலியுறுத்திய மரபு வழியான உணர்வுகளைக் கொண்டாட வேண்டும். இயற்கையை ரசிக்கிறோம் நாம் - ஏனெனில் நாமே இயற்கையால் ஆனவர்கள்.

நான் தண்ணீராலானவன்; தண்ணீரை ரசிக்கிறேன். நான் காற்றால் ஆனவன்; காற்றை ரசிக்கிறேன். மொத்தத்தில் இயற்கையை ரசிப்பதும் வாழ வைப்பதும் மனிதன் தன்னைத்தானே வாழவைத்துக் கொள்வதன் தொடர்ச்சி. ஆனால் இப்படி எதாலும் ஆகாத மனித குலத்தின் அறியாமையால் ஆன கடவுள், மத, மூட உணர்வுகளை மட்டும் காலம் கடந்தாலும் முதலாளித்துவம் கம்ப்யூட்டர் சாம்பிராணி போடும்போது இயற்கையைப் போற்றும் மரபுகளை மட்டும் 'பழசு' என எள்ளி நகையாடி எட்டி எறியப் பார்க்கிறது.

ஆனால் நமக்கோ பாய்ந்து வரும் புதுவெள்ளம் கண்டு, மக்கள் பறையொலி எழுப்பியதைப் பாடும் பரிபாடலின் *''வெங்காற்று வேசனை நாற்றாய் குதுகுதுப்ப / ஊரூர் பறையொலி கொண்டன்றுயர் மதிலில்''* என்ற இயற்கையின் மீதான மகிழ்வுணர்ச்சி வேண்டும். மாசேதுங் குறிப்பிட்டது போல ''கடந்த காலங்களில் இருந்து பெறப்பட்ட இலக்கியம் கலை ஆகியவற்றில் உள்ள பழம் செல்வங்களையும் நல்ல மரபுகளையும் நாம் எடுத்து வார்ப்பிக்க வேண்டும்.''

''அம்மா ஊடு எங்க? ஆத்துக்கு அந்தாண்ட'' என்று விளையாடிய பால்ய நண்பனைப் பார்க்க ஒருமுறை அவன் ஊருக்குப் போயிருந்தேன். ஒருவரிடம் வீட்டைக் கேட்க அவரோ ''நேரா போங்க ஒரு காஞ்ச குட்டை இருக்கும். அப்படியே மேக்கால திரும்புனா நடாம வயல் கெடக்கும். அந்த வழியா போனா தெருவு வரும். பம்படியில குடமெல்லாம் கெடக்கும். அதுக்கு எதிர் வீடு'' என்று 'காய்ந்த' அடையாளங்களை அடுக்கிக் கொண்டே போனார்.

நாம் வாழ்வது கம்ப்யூட்டர் யுகமாம். ஆனால் ஊரில் சூத்து கழுவ தண்ணியில்லையே என்றால்? அதனாலென்ன? வேத்து கிரகத்தில் தண்ணி இருப்பதை விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்க முடியும் என்று வாயைக் கழுவச் சொல்கிறது ஆளும் வர்க்கம்.

ஆனால் கால்நடை யுகத்தில் ஊரின நீர் வளத்தை ஒரு கால்நடையை வைத்தே பாடுகிறார் நத்தத்தனார் என்ற புலவர், *''கொழு மீன் குறைய ஒதுங்கி, வள்இதழ் கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை...''* (பத்துப் பாட்டு 41-46) அதாவது, கொழுத்த மீன்கள் காலடியில் நசுங்க, வயக்காட்டில் தேனுள்ள பூக்களை மேய்ந்து கரையேறும் எருமை, மிளகுக் கொடிகள் படர்ந்த பலா மரத்தின் நிழலில், காட்டு மல்லிகைகள் நிறைந்த இடத்தில் படுத்துக் கொள்ள, மஞ்சளின் மெல்லிய இலைகள் எருமையின் முதுகைத் தடவிக் கொடுத்ததாம். இப்படி எருமைக்குக் கிடைத்த இயற்கை வளங்கள் இப்போது நமக்கில்லையே என எருமையைப் பார்த்து ஏங்க வைக்கிறது பாடல்.

பன்னாட்டுக் கம்பெனி எருமைகள் இந்நாட்டு வளங்களையெல்லாம்

www.padippakam.com

**"ஆறுகெட நாணல் இடு; ஊருகெட பூணூல் இடு" என்பது பழமொழி. நம் பூமியே கெட ஆறு குளமெங்கும் குழாயை இறக்கிக் கொண்டிருக்கிறார்கள் தண்ணீர்க் கொள்ளையர்கள்.**

மேய்ந்து இலாபம் பார்க்க, தேசியக் கொடியால் முதுகைத் தடவிக் கொடுக்கும் இந்தத் தரகு அரசாட்சியை அடித்து விரட்ட பத்துப்பாட்டோடு, பட்டினப் பாலையும் வேண்டும் நமக்கு.

கரும்பு ஆலையின் புகையால் பக்கத்து வயல்களில் நெய்தற்பூக்கள் வாடுவதைக் கண்டு, சுற்றுப்புற வனப்பு கெடுவதைப் பார்த்த கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் *"கார்க் கரும்பின் கமழ் ஆலைத் தீத் தெறுவில் கவின்வாடி, நீர்ச்செருவின் நீள் நெய்தல்"* என்று வாடினார். திருப்பூர் சாயப்பட்டறை முதலாளிகளோ அந்நியச் செலாவணிக்காக ஆலைக் கழிவுகளை ஆற்றில் தான் விடுவோம். 'இலாபத்தின்' சுற்றுச் சூழலே முக்கியம் என வாதாடுகின்றனர்.

தொடர்ந்து மழையால் நனைந்து கருத்துக் காட்சியளிக்கும் வைக்கோல் பரப்பிய குடில்களைப் பார்த்து *"பருவ வானத்துப் பாமழை கடுப்பக் கருவை வேய்ந்த கவின் குடிச்சீறூர்"* என சுற்றுச் சூழலின் ஈரம் கண்டு பெருமிதம் பாடுகிறது பெரும்பாணாற்றுப் படை. கொளுத்தும் வெயிலோடு ஹூண்டாய் கார் புகையும், மாட மாளிகைகளின் மட்டற்ற ஏ.சி. வெப்பமும் சேர்ந்து நகரத்தையே தீக்கிரையாக்கி விட்டு 'நாடு முன்னேறிவிட்டதாக' நம்பச் சொல்கிறது அரசு.

சுற்றுச்சூழலையே எழிலற்றதாக ஆக்குகிறது என்று கருத்த குடிசைகளைக் காலி செய்யும் ஆளும் வர்க்கம், நம் கருவறையையும் கருப்பாக்கும் கார் கம்பெனிகளை வருந்தி அழைக்கிறது. ஓசோன் படலத்தில் ஓட்டை போடுவது யார்? காஜா பீடி அடிக்கும் தொழிலாளியா? கார் கம்பெனி முதலாளியா? அறம்பாடிய சங்ககாலப் புலவனுக்குள்ள மனிதகுல மேம்பாடு கூட அறிவியல் விழிப்புணர்வு கொண்டதாய்க் கூறிக் கொள்ளும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இல்லை.

கி.மு. 242-லேயே நீர்நிலைகளைப் பயன்படுத்துவதிலும், காடுகளை அழிப்பதிலும் இயற்கையை அழிக்காமல் பாதுகாக்க சட்டங்களை இயற்றினானாம் பேரரசன் அசோகன். உலகமயத்தின் குலக்கொழுந்து மன்மோகன்சிங்கோ தாய்நாட்டு நீர்வளங்கள் மேல் பன்னாட்டு கோக்கையும், பெப்சியையும் வர்க்கப் பாசத்துடன் ஏவிவிடுகிறார். தமிழ்நாடெங்கும் தண்ணீர் பாட்டிலின் ஓசையில் "நான் ஏழு வயசிலே இளநீர் வித்தவ; அம்பது வயசில அக்வாஃபினா வித்தவ" என ஜெயலலிதாவும் தன் பங்குக்கு வாங்கிப் பாடுகிறார்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளோ காவிரி ஆற்றில் நீர் ஓடுவதால் உழவர்கள் வேலை செய்யும் ஓசை, மதகு ஓசை என காவிரிக் கரையெங்கும் நீரால் விளைந்த பயனைப் பார்த்து *"உழவரோதை மதகோதை உடை நீரோதை... விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவிரி"* என்று நீர் வளத்தையே ஊர் வளமாகப் போற்றினார்.

நீருயர நெல் மட்டும் உயரவில்லை, மக்களின் கலாச்சார மட்டமும் உயர்ந்தது, *"முரவை போகிய முறியா அரிசி / விரல் என நிமிர்ந்த நிரல் அமை புழுக்கல்"* என முனை முறியாத விரல் போலத் தனித்து நீண்ட அரிசிச் சோறு கிடைக்கும் என உபசரிப்பைப் பாடுகிறது பொருநர் ஆற்றுப் படை. ரேசன் அரிசி விளைவிக்கவும் வழிகாட்டாத அரசாங்கமோ "தமிழ் நாட்டில் தண்ணீர்ப் பஞ்சம், வா ஆறு குளமெல்லாம் தயாராக்கித் தாரேன். குழாயப் போட்டுக் காசாக்கு!" என பன்னாட்டு முதலாளிகளுக்கு விருந்தோம்பல் செய்கிறது.


*"பாலின் நீர் தீயணுகப் பால் வெகுண்டு தீப்புகுந்து மேலும் நீர் கண்டமையும் மேன்மை போல்"* என தன் நண்பனாகிய நீர் ஆவியாகிப் பிரிவதைப் பார்த்து பால் சீறிப் பாயும் எனக் கருத்து ஏற்றிப் பாடுகிறது நீதிநெறி வெண்பா.

ஒரு பொருளின் மீது மனித உணர்ச்சியை ஏற்றிப் பாடுகிறான் அறிவியல் வளர்ச்சி காணாத அந்தக் காலத்தின் புலவன். இன்று உயிரையே பண்டமாக்குகிறது முதலாளித்துவம். அந்தப் பண்டத்திற்கு நம் பண்பாட்டையும் பலியிடலாமா?

பணம் கொடுத்து பாட்டில் தண்ணீர் வாங்க முடியாத ஏழைகள் பணமில்லாத காரணத்தினால் இன்னும் தமது பண்பாட்டை இழக்காமலிருக்கிறார்கள். தண்ணீருக்காகப் போராடுகிறார்கள்.

தண்ணீரைக் காசாக்கச் சம்மதிப்பது நம் மரபிற்கு இழுக்கு; மனித குலத்துக்கே இழுக்கு. நமது பண்பாட்டின் மீது படையெடுக்கும் பன்னாட்டு வெறிநாய்களை விரட்ட நம் முன்னோர்களின் பழைய செருப்புக்களையும் பயன்படுத்துவோம். தேய்ந்து அறுந்த செருப்புதான், எனினும் அந்தத் தோலில் இன்னும் சொரணை இருக்கிறது. அது நமக்குத் தேவைப்படுகிறது.

● துரை. சண்முகம்



www.padippakam.com

தனது சிறு படகில் கொச்சின் கடற்கரைக்குத் திரும்பும் மீனவர் பெர்னாண்டஸ் கண்களில் சோகம் தேங்கியிருக்க அனேகமாகக் காலியாக இருக்கும் தன் மீன் கூடையைக் காட்டுகிறார். பலமணி நேரம் போராடிய பிறகு அவருக்குக் கிடைத்திருக்கின்ற உழைப்பின் பரிசு அவ்வளவுதான்.

லத்தீன் அமெரிக்க மீன்பிடிக் கப்பல் மாலுமி ஜூவாரேஸ் ஒரு பேட்டியில் சொன்னார்: ''எங்கள் நாட்டு டி.வி. எங்களுக்குக் கோக் குடிக்கக் கற்று தருகிறது. ஆனால் அளவில் குறைந்து கொண்டே போகும் மீன் வளத்தைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லித் தருவதில்லை.''

- வற்றாத மீன்வளம் உள்ள கடல் என்று சொல்வார்களே அதற்கு என்ன நேர்ந்தது?

ஒருபுறம் வறிய ஆசிய - இந்தியக் கடற்கரை; இன்னொருபுறம் செல்வம் கொழிக்கும் டோக்கியோவின் சிகி ஜீ மீன் சந்தையில் மிகப் பெரிய சுவை மிக்க டூனா மீன் 6,500 டாலர் முதல் 11,000 டாலர் வரை விலை போகிறது. அங்கே ஓர் ஏலத்தரகர் 1/2 மணி நேரத்தில் 200 மீன்கள் விற்கிறார். அமெரிக்க 'அலாஸ்கா கடல்' என்ற தொழில் துறைக் கப்பல் (கப்பல் என்று சொல்வதைவிட மீன் புரதப்பாளங்களைக் கடல் மேலேயே தயாரித்து பனிக்கட்டிப் பெட்டியில் அடுக்கிவிடும் ஆலை என்று சொல்லலாம்) ஒரு நாளைக்கு மட்டும் ஆறு லட்சம் கிலோ பொலாக் கடல்மீன் கறியைப் பதப்படுத்துகிறது.

ஒருபுறம் 'தர'மான மேட்டுக்குடி நுகர்வோர், இன்னொருபுறம் 'தேவையற்ற' உழைக்கும் மக்கள் என்று ஆக்கியது யார்?

மீன் பிடித்தொழிலின் தொழில் நுட்பமும் போட்டா போட்டியும் படுவேகமாக ஏறிக் கொண்டே போகிறது; இதற்கு எதிர் விகிதத்தில் உலக மீனின் அளவு குறைந்து கொண்டே போகிறது. இதுதான் யதார்த்தம்; இதுவேதான் ஜூவாரேஸும், பெர்னாண்டசும் அடித்திருக்கும் எதிர்காலத்துக்கான எச்சரிக்கை மணி.

●●

மீன்கள் அழிவதற்கு யார் காரணம்? ஆழ்கடலில் 400 அடி வாய் உள்ள பெரிய பை வலை கொண்ட பிரம்மாண்டமான யந்திரக் கப்பல்கள் (டிராலர்கள்) வைத்து மீன் அள்ளும் பன்னாட்டுக் கம்பெனிகளின் லாப வெறி முதற்காரணம். அடுத்து, கடற்கரை அருகிலேயே வெதுவெதுப்பான கடல்நீரில் விசைப்படகுகள் மூலம் வலைவீசி மீன்பிடிக்க பன்னாட்டுக் கம்பெனிகள் மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளை வளைத்துப் போட்டிருப்பது இரண்டாவது காரணம். அமெரிக்கப் பன்னாட்டுக் கம்பெனிகளின் டிராலர்கள் ஒரு கிலோ வளர்ந்த இறால் பிடிக்க 12 கிலோ அளவு பலவகை மீன் குஞ்சுகளையும், இறால் குஞ்சுகளையும், பல்வேறு கடல்வாழ் உயிரினங்களின் குஞ்சுகளையும் சாகடிக்கின்றன. இவர்கள்தான் மீன்கள் அழிவதற்குக் காரணம்.




ஏகாதிபத்தியங்களின் கவந்தப் பசி

உலக மீன்வளத்தில் பெரும் மூலதனப் போட்டி தொடங்கி பல ஆண்டுகளாகி விட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கழுத்தறுப்புச் சண்டை கடலிலும் நடந்தது. 1960-70 ஆண்டுகளில் ஆழ்கடலில் மீன்பிடிப்பதில் ஏராளமான தாவாக்கள் வளர்ந்தன. ஏழை மூன்றாம் உலக நாடுகளின் விடாப்பிடியான போராட்டங்கள் காரணமாக ஐ.நா.வில் 1983-இல் கடற்கரைக்கப்பால் சுமார் 370 கி.மீ (அ-து 200 நாட்டிகல் மைல்) 'சிறப்புப் பொருளாதார மண்டலம்' (இ.இ.இசட்- EEZ) என்ற எல்லை குறித்துச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி ''உலக நாடுகள் இ.இ.இசட் எல்லைக்குள் அந்நியக் கப்பல்கள் மீன் பிடிக்க நுழையக் கூடாது.''

ஏகாதிபத்தியங்கள் சட்டங்களை மீறுவதற்காக மட்டுமே சட்டங்களைப் போடும். அது போலவே கடல் எல்லை மீறி ஆப்பிரிக்க - ஆசியக் கரையோர சிறப்பு மண்டலத்துக்குள்ளேயே அந்நியக் கம்பெனிகளின் கப்பல்கள் புகுந்தன.

கனடாவின் இ.இ.இசட் எல்லையின் மேலே நின்று கொண்டு ஸ்பெயின், போர்ச்சுக்கல் டிராலர்கள் அதிகபட்ச மீன்களைக் கொள்ளையடித்தன. ஸ்பெயினின் மேற்குக் கடற்கரையோர 'விகோ' கடல் எல்லையில் சுறா வேட்டையாடி ஐரோப்பிய, ஆசியச் சந்தைகளுக்கு அனுப்பின பன்னாட்டுக் கழகக் கப்பல்கள். இதனால் அரியவகை ஐரோப்பியச் சுறா இனங்கள் அழிக்கப்பட்டதோடு, சுற்றுச் சூழல் உயிரியல் சமச்சீரும் அழிக்கப்பட்டது.

மீன் சந்தைக்கான வேட்டை எப்படி இருபதாண்டுகளாக இறால் பண்ணை மூலம் இந்தியாவைச் சீரழித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழகத்தில் ம.க.இ.க., வி.வி.மு போன்ற புரட்சிகர அமைப்புகளின் 'இறால் பண்ணை அழிப்புப் போராட்டத்தை' நீங்கள் அறிவீர்கள்.

இதுமட்டுமல்ல, எழுபதாம் ஆண்டுகளில் இந்தியாவில் திணிக்கப்பட்ட 'பசுமைப் புரட்சித் திட்டம்', மற்றும், பிறகு வந்த 'வெண்மைப்புரட்சி', சமூக நலக் காடுகள், விதை இல்லாத பழ வகைகள், பீட்டாகாட்டன் அனைத்துமே பன்னாட்டுக் கம்பெனிகளின் நலன்களுக்கான திட்டங்கள்; அவை நம் விவசாயிகளைக் கொள்ளையடித்து வறுமைக்கும், தற்கொலைக்கும் தள்ளின.

இதோ, இப்போது உலக மீன்வளத் துறையில் (பசுமைப்புரட்சி, இறால் பண்ணை போன்று) கூடுதலான பேரபாயம் வந்து விழுந்திருக்கிறது. அமெரிக்க அரசு புதிய கடல் சட்டம் ஒன்றை விவாதிக்கத் தொடங்கியுள்ளது. அது தேசீய 'கடற்கரை அருகில் உள்ள (நீரில்) மீன்வளம் பெருக்குவதற்கான சட்டம் (NOAA, 2005)', மீன்வளம் பெருக்குவதைத் தொழில்துறையாக மாற்றுவதே அதன் நோக்கம்.

கடந்த 20 ஆண்டுகளாகச் செய்து வந்த பரிசோதனைகளின் பலன்களை அமெரிக்க அரசும், அமெரிக்கப்


படிப்பகம்

www.padippakam.com

பன்னாட்டுக் கம்பெனிகளும் சேர்ந்து அமல்படுத்த முனைவதன் ஆரம்பமே அந்தச் சட்டம். ''அமெரிக்க கடல் கொள்கை ஆணைய''த்தில் 16 ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களில் 9 பேர் எண்ணெய், சுரங்கக் கனிவளம், வளர்ச்சித் திட்டங்கள், மீன்வளம் பலவிதக் கழிவுகளை அகற்றும் வேலைக்கான கம்பெனிகளின் முதலாளிகள். எனவே அவர்கள் புதிய கடல் திட்டத்தை முழுக்க அனுபவிக்கத் தயாராக நிற்கிறார்கள்.

இதற்கிடையே, அரசுச் செலவில் பல பல்கலைக்கழகங்கள் பல சோதனை முயற்சிகளைச் செய்து அங்கீகரித்துச் சொல்லியிருக்கின்றன. அவற்றில் முக்கிய 2 அம்சங்களாவன: ஒன்று, ஏற்கெனவே பயன்படுத்தி ஒப்பந்தம் தீர்ந்த எண்ணெய்த் துரப்பண மேடைகளையே மீன்பிடித் தொழிலுக்கும் பயன்படுத்துவது; இரண்டு, மீன்மிதவைகள் வைப்பது; '20,300' கிலோ (சுமார் 20 டன்) எடை கொண்ட மிதவைகள் - அகலம் 80 அடி உயரம் 50 அடி உள்ள பிரம்மாண்டமான கூண்டுக்குள்ளே பல பத்தாயிரக்கணக்கான மீன்களுக்கு உணவு போட்டு, சிறப்பு வகை மீன்கள் வளர்க்கப்படும். கரையில் கம்ப்யூட்டர் மேசை முன்னால் அமர்ந்து யந்திரங்களை வைத்து அதன்மூலம் கடலுக்குள்ளே அந்த மிதவைப் பண்ணைகளை நடத்துவது. இதனால் எண்ணெய் மேடை சுத்தம் செய்யும் கோடிக்கணக்கான ரூபாய் செலவினம் குறையும், புதிய மீன் பண்ணைகளுக்கு வரிச்சலுகை உண்டு - ஒரே அம்பில் பலமீன் வேட்டை. தவிர, தொழிலை விரிவுபடுத்தலாம் - உலகில் எந்தச் சந்தையில் விலை சூடாக உள்ளதோ, அந்த இடத்திற்கு மிதவையை நகர்த்திப் புத்தம் புது மீன்களை விற்கலாம். எனவே, இத்திட்டம் மூலம் அமெரிக்க அரசின் முக்கிய முதல் தொழிலாக உள்ள எண்ணெய் வளத்தையும் மீன்வளத்தையும் இணைக்கப் போகிறார்கள்.

கடந்த இருபதாண்டுகளில் மீன்பிடித் தொழிலை பிரம்மாண்டமான தொழிலாக மாற்றுவது, உயிரியல் சோதனை மூலம் புதுவகை ருசி மீன்களை வளர்ப்பது, அதனால் ஏற்படும் விளைவுகளை வழமைபோலப் புதிய வகை நிர்வாகம் - அரசியல் கொண்டு சரிக்கட்டுவது என்று பலவித அமெரிக்க ஆராய்ச்சிகள் ரகசியமாக நடந்தேறியுள்ளன.

இதில் ஒன்றை மட்டும் சுருக்கமாகப் பார்க்கலாம்; ருசியான சாலமன் மீன்கள் வளர்ப்பு. இதற்கு அலங்காரமாக 'உலக சாலமன் மீன் விவசாயம்' என்று பெயர். இதில் பெரிய ஆட்டம் போட்டது நார்வேயும் சிலியும். 70-ஆம் ஆண்டுகளில் மீன்வளத் தொழில் நுட்பத்தில் விரிவாக வளர்ந்தது நார்வே; நார்வே கம்பெனிகள் சிலியிலும், கனடாவிலும் பல லட்சம் சாலமன் மீன்கள் வளர்த்தன. 'சாலமன்' என்றால் என்ன என்றே அறியாத சிலி 20 ஆண்டுகளில் உலகின் முதலிடத்தை



சாலமன் உற்பத்தியில் பிடித்தது. சிலியின் மலிவான அடிமட்டக் கூலி உழைப்பு, சுற்றுச்சூழல் - சமச்சீரைப் பற்றி அக்கறைப்படாமல் கடலைச் சகதியாக்கியது இரண்டும்தான் சிலியை உயர்த்தியது. உடனே உலகின் பல நாடுகள் சாலமன் விவசாயத்தில் இறங்க பேராசை கொள்ள வைக்கப் பட்டன.

சாலமன் மீனைப் போல வேறு உயர்ரகச் சுவைமீன் கண்டதும் சந்தை அந்தப் பக்கம் ஓடிவிட்டது. புதிய சாலமன் விவசாயிகள் ஒரே அடியில் அழிந்து போனார்கள். ஏற்கெனவே அத்துறையில் கொட்டை போட்ட ஏழே ஏழு பெரிய கம்பெனிகள் மட்டும் நின்றார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், நார்வேக் கம்பெனிகள் - பன்னாட்டுக் கம்பெனிகள் மட்டும் உலகக் கடல் பிராந்தியங்களில் கால் ஊன்றும் அரசியல் போர்த்தந்திரத் திட்டத்தோடு கன ஜாக்கிரதையாக நகர்ந்ததால் 'வென்றார்கள்'. பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி போலவே இது நீலப்புரட்சி. பாரம்பரிய உற்பத்தி வகைகள், வினியோக முறைகள், வேர் அறுக்கப்பட்டு 'இனி திரும்பி பழைய நிலைக்குப் போக முடியாது' என்பது போலப் பல நாடுகளின் விவசாய உற்பத்தி பசுமைப்புரட்சியால் சீரழிக்கப் பட்டதைப் போலவே நீலப் (கடல்) புரட்சியினாலும் பல நாடுகளின் கடல் உற்பத்தி சீரழிக்கப்பட்டது. அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானின் உயர் குடி மக்களுக்கு நாக்கின் சுவை கூடியது.

சாலமன் தொழில் முறை உற்பத்தி என்பது ஒரு வகைமாதிரி. சாலமன் மீன், மாமிச உணவு உண்டு வளர்வது. ஹெர்ரிங், ஆங்கோலி, சார்டைன், கிரில் (நம் ஊரில் கானாங்கெளுத்தி, மத்தி, வவ்வால், எறால் போன்றவை) போன்ற ஏழை நாடுகளின் கடலிலிருந்து பல லட்சம் மீன்கள் புரத உருண்டைகள் ஆக மாற்றப்பட்டு சாலமனுக்கு இரையாகின. தவிர, இந்தப் பலரக மீன் ஏற்றுமதிக்காக ஏழை நாடுகளுக்குள் உலக வங்கிக் கடன்கள், தனியார்மயக் கொள்கைகள் நுழைந்தன. அவல் அவர்களுக்கு, உமி நமக்கு - ஊதி ஊதித் தின்றதில் உபரி ஆதாயம் ஓட்டுக் கட்சிகளுக்கு.

மேற்சொன்ன அனுபவங்களிலிருந்தான அமெரிக்க ஆராய்ச்சிகளின் இறுதி வடிவம் தான் தொழில்துறை மீன்வளத்துக்கான புதிய கடல் திட்டமாக உருவெடுத்துள்ளது. முதலில் அமெரிக்காவில் கடற்கரை அருகே உள்ள கடல் பகுதியில் (இ.இ.இசட்) செயல்படுத்தப்படும் இத்திட்டம் - 'அமெரிக்க மீன் வளத்தில் பற்றாக்குறை போக்குவோம்!', 'உலகுக்கே உணவு ஊட்டுவோம்!' என்ற முழக்கங்களை வைத்து முன்னே தள்ளப்பட்டுள்ளது.

உலக உணவு உற்பத்தித்துறையைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து உலக நாடுகளை 'ஒற்றை விவசாயப் பொருள் உற்பத்தி' நாடுகளாக மாற்றுவதன் மூலம், வினியோகத்தையும் தன் கட்டுக்குக் கொண்டு வந்து உலக மேலாதிக்கத்தை நிறுவ வெறியோடு உலகெங்கும் பாய்ந்துவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடல் ஆதிக்க நோக்கம் உலக மனிதாபிமானம் அல்ல. 'உலகுக்கே உணவு ஊட்டுவோம்!' என்ற உள்நாட்டு முழக்கமும்



படிப்பகம்

www.padippakam.com

இப்படிப்பட்டதே. இந்த அதிகார விரிவாக்கத்தை அமெரிக்க அரசு, அமெரிக்கப் பன்னாட்டுக் கம்பெனிகள் என்று இருமுனை கொண்ட ஏகாதிபத்திய விரிவாக்கமாகப் பார்க்கவேண்டும்.

தான் மிகப்பெரிய ஜனநாயகவாதி என்று மார்தட்டும் போதே 'காட்டுமிராண்டிகளின்' அரசுகளை மாற்றி அங்கே ஜனநாயகத்தை ஏற்றுமதி செய்கிறோம் என்று சொல்கிறது அமெரிக்கா. ஈராக், ஆப்கான் போர்கள் இதன் நிரூபணங்கள். அதேபோன்றதுதான் வரவிருக்கும் கடல்திட்டமும், என்ஓஏஏ - அமெரிக்க தேசிய மீன்வளத்திட்டம் 2005 என்ற கடல் சட்டமும். ஆழ்கடலில் உலகப் பொது உடைமையான கடலைச் சுரண்டியது போல, நாடுகளின் அருகே உள்ள கடல் பகுதிகளைச் சுரண்டுவதற்கு முன் ஒட்டமாக அமெரிக்காவில் சோதனை ஓட்டம் நடத்துகிறது; பிறகு உலக நாடுகளின் இ.இ. இசட் பகுதிகளும் அமெரிக்காவால் வளைத்து ஆக்கிரமிக்கப்படும்.

தற்சமயம் உலகவங்கி இந்தியத் திட்டங்களுக்குக் கடன் கொடுக்கும் போது 'காட்', 'காட்ஸ்' சட்டங்களைக் காட்டி தண்ணீர் தனியார்மயத்தை ஏற்கச் செய்வது போல, கடல் உரிமைகளைப் பன்னாட்டுக் கம்பெனிகளுக்குத் தாரை வார்க்கும் நிபந்தனைகளை ஏற்கச்செய்யும்.

'கடல்மீன் பிடித்தொழில்' என்ற சொல்போய் கடல் விவசாயம், கடல் விவசாயிகள் என்ற சொற்கள் வழக்கில் திணிக்கப்பட்டு வருகின்றன. உலகின் மூன்றில் 2 பாகம் உள்ள கடல் பெரும் பொதுச்சொத்து ஆகும். கடல் மீன்கள், பலவகை ஜீவராசிகள், இயற்கையாகவே உணவாகக் கூடிய கடற்கீரைகள் எனப்படும் பாசிவகைகள், கடலடிப் பூமியில் எண்ணெய், எரிவாயு, கனிமங்கள் என்று ஏராளமான செல்வம் வைத்திருக்கும் கடல் நேற்றுவரை பொதுச்சொத்து. அமெரிக்காவின் 'கடல் திட்டம்' வந்தபிறகு ஒவ்வொன்றாக மாறும். உலகக்கடல் தனியார்மயமாக மாறத் தொடங்கும்.

அந்தத் திட்டத்தின் சாரம் என்ன? அது என்ன செய்யும்? தனது கடற்கரை அருகாமையில் உள்ள 370 கி.மீ. தொலைவுக்கு மீன்பிடித்தலை தொழில் துறையாக அறிவித்து அது மாற்றும். (கடல் எல்லை என்பது கடலடி நிலப்பரப்பையும் சேர்க்கிறது) முன்பு இருந்த இந்த எல்லைக்குள் அன்னியர் வரக் கூடாதென்ற விதியை மாற்றி சட்டத்தில் தொழில் செய்யும் 'நபர்' என்ற சொல்லுக்கு அமெரிக்கர் மற்றும் அமெரிக்கர் அல்லாத தனிநபர்களும், பன்னாட்டுக் கார்ப்பரேசன் கம்பெனிகளும் என்று விளக்கம் அளிக்கிறது; 'அரசு' என்று திட்டத்தில் வரும் இடங்களில் அமெரிக்க கடல் எல்லை நிலமும் மற்றும் அமெரிக்காவின் வசம் உள்ள பகுதிகளும் என்ற புதுவிளக்கம் அளிக்கிறது - தன்வசம் என்பதற்கு அமெரிக்கா ஈராக், ஆஃப்கான் மற்றும் கடன் வாங்கும் ஏழை நாடுகள் என்று கூட விளக்கம் சொல்லலாம்.

இதுவரை சுற்றுச்சூழல் சம்பந்தமாக அமெரிக்க வேகத்தைத் தடுக்கும்

**எண்ணெய், எரிவாயு, கனிமங்கள் என்று ஏராளமான செல்வம் வைத்திருக்கும் கடல் நேற்றுவரை பொதுச்சொத்து. அமெரிக்காவின் 'கடல்திட்டம்' வந்தபிறகு உலகக் கடல் தனியார்மயமாக மாறத் தொடங்கும்.**

தடுப்பரணாகச் சொல்லப்பட்ட மக்னூசன் - ஸ்டீவென்ஸ் சட்டம் (எம்.எஸ். சட்டம்) புதிய கடல் சட்டத்தில் செல்லாது. அதாவது, சுற்றுச் சூழல் - சமச்சீர் காக்கும் விதிகளை கம்பெனிகள் கடைப்பிடிக்க வேண்டாம்; லாபம் ஒன்றே குறியாக என்ன ஆட்டமும் போடலாம். மரபின ஆய்வில் வளர்க்கப்படும் புதுரக மீன்களுக்கு எம்.எஸ். சட்டப்படி முன்பு வரம்புகள் உண்டு. இனி இல்லை. 1996 முதல் 1999 வரை அமெரிக்க வளர்ப்பிலிருந்து தப்பி ஓடிய 6 லட்சம் சாலமன் வகை அட்லாண்டிக் சண்டை மீன்கள் வாஷிங்டன் கடலில் கலந்து பல ஆயிரம் ரக மீன்களை அழித்தன; புதுப்புதுக் கிருமிகளைப் பரப்பின. அவற்றை ரகசியமாக்கி விட்டார்கள். இனி, எதுவும் நடக்கும்.

••

உலகை வலம் வந்துவிட்டு, பெர்னாண்டஸையும் ஜூவாரேஸையும் பார்த்தால் அவர்கள் சொற்களின் யதார்த்தம் நம்மைச் சுடுகிறது. மீனவர்களுக்கு மீனும் இல்லை; மீனவக் குடியும் இல்லை. தமிழகத்தில் ஒருமுறை சுனாமி அடித்து ஓய்ந்த உடனேயே பிணங்களின் மீதே உலகவங்கி அதிகாரி நடந்து வந்தான்; உள்ளூர் 'ஜெ' அரசோடு பேச்சு வார்த்தை நடத்தினான். உடனே, ''மீனவர்களைப் பாதுகாக்கிறேன்'' என்ற 'ஜெ' அரசு மீனவக் குடிகளைக் கடலின் அருகிலிருந்து வேறிடத்துக்கு இடம் பெயர்த்து அனுப்பியது. சுனாமி ஒரு சாக்குப்போக்கு; அவர்களை நிரந்தரமாகப் பாரம்பரியத் தொழிலை விட்டு விரட்ட ஒரு முகாந்திரம். பெர்னாண்டஸின் சொற்கள் எவ்வளவு நிஜம் பாருங்கள்.

அமெரிக்கப் புதுச்சட்டத்தின் சூடு நம் ஊர்க்கடல் எல்லைக்குள் வேகமாகப் பாய்வதற்கு முன் விழித்துக் கொள்ள வேண்டும். இப்போதே மக்களைத் திரட்ட வேண்டும்.

அமெரிக்கச் சட்டத்தை எதிர்த்து இப்போது அமெரிக்க மீனவர்கள் போராடத் தொடங்கி விட்டார்கள். 'பசுமை உலகம்' என்றழைத்துக் கொள்ளும் தன்னார்வ, தொண்டு நிறுவனங்கள் கூடவே களத்தில் உள்ளன. இ.இ.இசட் என்ற உள்நாட்டுக் கடல் பகுதியிலேயே ஒரு சில இடங்களை உள்நாட்டுச் சிறு மீனவர்களுக்கு என்று அறிவித்துவிட்டால், தொண்டு நிறுவனங்களுக்கு 'நிதிகளை' எடுத்து வீசிவிட்டால் அடங்கிப் போவார்கள், ஒதுங்கி விடுவார்கள் என்று நேர்மையான அரசியல் ஆய்வாளர்களும், விமர்சகர்களும் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளும் சொல்கிறார்கள். மீதம், நின்று போராடக் கூடியவை மக்கள் இயக்கங்களே.

பலமுனைகளிலிருந்தும் ஏகாதிபத்திய மறுகாலனியாக்கத் தாக்குதல்களைச் சமாளிக்க இயலாது போராட்டங்களைத் தொடரும் மூன்றாம் உலக மக்களே அமெரிக்கக் கடல் சட்டத்தின் எதிர்கால விளைவுகளுக்கும் சேர்த்து எதிர்த்துப் போராட முடியும், எதிர்க்க வேண்டும்.

நில உரிமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக ஏகாதிபத்தியங்களின் கம்பெனிகளுக்கு இழப்பதுபோல, கடலையும் நாம் இழக்க முடியாது. இது வாழ்வா - சாவா என்ற போராட்டம். மீனவர்களின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல, இது உலக மக்கள் அனைவரின் வாழ்வுரிமைப் பிரச்சினை.


• க.மு.



படிப்பகம்

www.padippakam.com

**தண்ணீரை வியாபாரமாக்காதே!**
**தண்ணீரைத் தனியார்மயமாக்காதே!**



தாமிரவருணியை உறிஞ்ச வரும்

# அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!

## நெல்லை
## கங்கைகொண்டானில்

**12, செப்-2005**

# மறியல்

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**

# கருத்தரங்கம்

## கலைநிகழ்ச்சிகள் - ஓவியக் காட்சி

***3, செப்-2005, சனிக்கிழமை காலை 10 முதல் மாலை 7 வரை***

ரோஸ் மகால், மாவட்ட அறிவியல் மையம் எதிரில், கொக்கிரக்குளம், திருநெல்வேலி.

**மருதையன்,** பொதுச் செயலர், ம.க.இ.க.
**முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டெ,** மும்பை.
**ராஜேந்திர சாரங்கி,** ஒரிசா.
**எம்.பி. வீரேந்திர குமார்,** நிர்வாக இயக்குநர், மாத்ருபூமி, மலையாள நாளேடு.
**த. வெள்ளையன்,** தலைவர், வணிகர் சங்கம்.
**ப. திருமலைராசன்,** தலைவர், வழக்குரைஞர் சங்கம்.
**தி. லஜபதிராய்,** மதுரை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்.
**சி.எஸ். மணி,** கவுன்சிலர், கங்கைகொண்டான்.

**தண்ணீர்: தாகத்திற்கா இலாபத்திற்கா?**



விலை: ரூ. 5

தண்ணீர் வியாபாரம் என்பது வறட்சியின் காரணமாகத் தானாகவே தோன்றியதல்ல. தண்ணீரைத் தனிச்சொத்தாகவும், விற்பனைச் சரக்காகவும் மாற்றுவதென்பது பன்னாட்டு நிறுவனங்களின் திட்டம். உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம், காட்ஸ், தண்ணீர்க் கம்பெனிகள் ஆகியோர் இணைந்து உலகெங்கும் நடத்திவரும் சதியை அம்பலமாக்குகிறது இந்நூல். தாமிரவருணியை 'கோக்'கிற்கு விற்பது தனியொரு பிரச்சினையல்ல; அது தனியார்மயக் கொள்கையின் அங்கம்; தண்ணீர் தனியார்மயமோ மறுகாலனியாக்கத்தின் விகாரமான வெளிப்பாடு என்பதை நிறுவுகிறது இந்நூல்.



**THIRST FOR PROFIT**

ஆங்கிலக் கட்டுரைகள்

நன்கொடை: ரூ. 25

தண்ணீர் தனியார்மயத்திற்கெதிராக மாட் பார்லோ, சாய்நாத், வந்தனாசிவா போன்றோர் எழுதியுள்ள ஆங்கிலக் கட்டுரைகள், பல்வேறு உலக நாடுகளிலும் இந்தியாவிலும் தண்ணீர் தனியார்மயம் தோற்றுவித்த விபரீதங்கள் குறித்த செய்தித் தொகுப்புகள், பேட்டிகள் ஆகியவற்றின் தொகுப்பு.

இரு நூல்களும் **புதிய கலாச்சாரம்** அலுவலகத்தில் கிடைக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளையனின் நகரங்களில் அமைதியான ஒரே ஒரு இடத்தைக் கூட உன்னால் காட்ட முடியாது; வசந்த காலத்தில் இலைகள் விரியும் ஓசைகளை அங்கே கேட்க முடியாது; ஒரு பூச்சியின் சிறகுகள் அசையும் ஓசையைக் கூடக் கேட்க முடியாது.

ஒருவேளை, நான் காட்டுமிராண்டி என்பதால் எனக்குப் புரியாது என்பாய்.

உனது நகரங்களின் இரைச்சல் காதைக் கிழிக்கிறது; இரவில் ஒற்றைப் பறவையின் ஏக்கம் தொனிக்கும் குரலோ, குளத்தின் அருகே தவளைகளின் சுவையான விவாதங்களோ கேளாத வாழ்க்கை என்ன வாழ்க்கை? நான் ஒரு செவ்விந்தியன், எனக்கு விளங்கவில்லை.

குளத்தின் மேல் தடவிச் செல்லும் காற்றின் ஒலியை விரும்புகிறான் ஒரு செவ்விந்தியன். பகலில் பெய்யும் மழை சுத்தப்படுத்திய காற்றின், ஊசி இலையில் பரவி வந்த காற்றின் வாசனையே அவன் விரும்பும் வாசனை.

காற்று அவனது பொக்கிஷம். விலங்குகள், மரங்கள், மனிதர்கள் என்று எல்லா சீவராசிகளுமே ஒரே மூச்சுக் காற்றைத்தான் சுவாசிக்கின்றன.

ஒரு வெள்ளையன் தான் சுவாசிக்கும் காற்றை என்றைக்காவது நின்று கவனித்திருப்பானா?

பல நாட்களாகவே மரணப் படுக்கையில் விழுந்து விட்டவனைப்போல அல்லவோ நாறும் காற்றில் அவன் மூச்சிறுகிக் கிடக்கிறான்.

உங்களுக்கு நிலத்தை விற்கிறோம் என்றால், காற்று எங்களின் பொக்கிஷம் என்று அறிந்து கொள்ளுங்கள். எல்லா உயிருக்கும் காற்றே ஆதாரம், அவற்றில் எல்லாம் காற்றின் ஆன்மா பாய்ந்து ஓடுகிறது. எங்கள் பாட்டனுக்கு எது முதன்முதலில் உயிரானமூச்சைக் கொடுத்ததோ, அதே காற்றுதான் அவருக்கு மரணத்தின்போது பெருமூச்சையும் கொடுத்தது.

எங்கள் நிலத்தை விற்கிறோம் என்றால், தனியே அதை நீ புனிதமாகக் கருதவேண்டும், பாதுகாக்க வேண்டும். அங்கே போகிற வெள்ளையன்கூட பூக்களின் இனிய மணம் நிறைந்த காற்றைச் சுவாசிக்கலாம்.

நானொரு காட்டுமிராண்டி; எனக்கு வேறு விதமாகப் புரிந்து கொள்ளவும் தெரியவில்லை.

புல்வெளியில் ஆயிரம் எருதுகளின் சடலங்கள் அழுகிக் கிடப்பதைப் பார்த்திருக்கிறேன் - அவை, அருகே ரயிலிலிருந்து வெள்ளையர்களால் பொழுதுபோக்குக்காகச் சுட்டுக் கொல்லப்பட்டவை. புகை விட்டுச் செல்லும் உன் ரயில் எங்கள் எருதுகளை விட எந்த விதத்தில் உயர்ந்தது? எனக்கு விளங்கவில்லை - நானொரு காட்டுமிராண்டி.

விலங்குகள் இல்லை என்றால் மனிதன் ஏது? விலங்குகள் எல்லாம் ஒழிக்கப்பட்டு விட்டால் ஆன்மாவை விட்டு விட்ட கூடுபோல மனிதன் செத்துப் போவான்.

விலங்குகளுக்கு என்னவெல்லாம் நேர்ந்ததோ, மனிதனுக்கு அவை சீக்கிரத்திலேயே நடக்கும். எல்லாமே ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை.

உன் குழந்தைகளுக்கு நீ கற்றுத்தா - அவர்களின் காலடியில் உள்ள மண் பாட்டன்மாரை எரித்த சாம்பல் என்று. அதனால்தான் அவர்கள் நிலத்தைப் போற்ற வேண்டும் என்கிறேன். எங்கள் சுற்றத்தாரின் வாழ்க்கையால் நிரம்பிய பொக்கிஷமே இந்தப் பூமி என்பதை உன் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்.

பூமி நமது தாய் என்று நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தோம்; அதை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள்.

பூமிக்கு எதெல்லாம் நேரிடுமோ அதுவே அவன் பிள்ளைகளுக்கும் ஆகும்.

பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல, மனிதன் தான் பூமிக்குச் சொந்தம் - இது எங்களுக்குத் தெரியும்.

பொருள்கள் எல்லாம் உள்ளே இணைந்தவை - ஒரு குடும்பத்தை ரத்தச் சம்பந்தம் பிணைப்பது போல. எல்லாப் பொருள்களும் உள்ளுக்குள்ளே இணைந்தவை.

பூமிக்கு எதெல்லாம் நேரிடுமோ அதுவே அவன் பிள்ளைகளுக்கும் ஆகும்.

மனிதன் வாழ்க்கை என்ற வலையைப் பின்னவில்லை; அவன் அதில் ஓர் இழை மட்டுமே. அந்த வலைக்கு அவன் எத்தனைக்கேடுகள் செய்தாலும், அவற்றையெல்லாம் தனக்கே செய்து கொண்டவனாகிறான்.

கடவுளே வந்து அந்த வெள்ளையனோடு தோளோடு தோள் சேர்ந்து நடக்கலாம்; நண்பர்களைப் போலக் கலந்து பேசலாம்; ஆனால் அவனுக்கும் இறுதித் தீர்ப்பிலிருந்து விதிவிலக்கு இல்லை.

என்ன இருந்தாலும் நாம் அனைவரும் சகோதரர்கள்தானே, இதோபார்.

வெள்ளையர்களாகப் பிறந்தவர்களும் உலகை விட்டு நீங்கத்தான் வேண்டும்; மற்ற எல்லாப் பழங்குடியினரை விடச் சீக்கிரமாகவே மறைந்தும் போகலாம். நீ படுத்துறங்கும் நிலத்தை நீயே அசுத்தப்படுத்தினால் ஓரிரவில் உன் குப்பைகளுக்குள்ளேயே மூச்சு முட்டி நீ செத்துப் போகலாம்.

அந்த இறுதி முடிவு ஒரு விளங்காத புதிர்போல. எருதுகள் படுகொலையையும், காட்டுக் குதிரைகளைப் பழக்கி விடுவதையும், காடுகளுக்குள்ளே எங்கு பார்த்தாலும் மனித நடமாட்டம் அதிகரிப்பதையும், பழைய பூர்வீகமான மலைகளை மறைத்து தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருவதையும் நாம் விளங்கிக் கொள்ளாமலேயே இருக்கிறோம். வரப்போகிற அந்த இறுதி முடிவு ஒரு விளங்காத புதிர் போல.

புதர்க் காடுகள் எங்கே?
எல்லாம் போயிற்று

மலைக் கழுகுகள் எங்கே?
அவையும் மறைந்தன.

விரைவாக ஓடும் மட்டக்
குதிரைகளையும் வேட்டையாடி
அழித்துக் கொண்டிருக்கிறார்கள் -

என்ன நடக்கிறது?

இப்படி வாழவேண்டும் என்ற
அவர்களின் வாழ்க்கை
முடிந்து விட்டது -

எப்படியோ மீதமிச்ச வாழ்க்கை
மட்டும் நடந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக வைத்துக் கொள்வோம் - எங்கள் நிலத்தை நாங்கள் நேசித்ததுபோலவே நீங்களும் நேசியுங்கள்; நாங்கள் எப்படிக் காப்பாற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றுங்கள்; எங்களிடமிருந்து நிலம் பெறுகின்றபோது எப்படி இருந்தது என்பதை மட்டும் நினைவில் வைத்திருங்கள்; எல்லா உறுதியுடனும், எல்லா வலிமையோடும் முழுமையான விருப்பத்தோடும் உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள். இந்நிலத்தை நேசியுங்கள்... கடவுள் நம் எல்லோரையும் நேசிப்பதுபோல.

*மொழியாக்கம்:* புதூர் இராசவேல்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்டஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05

# நீர்க் கடுப்பு

தண்ணீர் அழுவது யாருக்குத் தெரியும்?
சொந்த மக்களின் பனிக்குடம் மறுத்து
அந்நியக் கம்பெனி பாட்டிலில் நிரம்பும்
அருவருப்பு தாளாமல்
தண்ணீர் அழுவது யாருக்குத் தெரியும்?

○

கொட்டியும் ஆம்பலும்
குளத்துறை மீனும் துடித்து இறக்க
ஒட்டிய வாழையும் ஓரிதழ் புல்லும்
முகம் வெடித்துக் கருக
கட்டிட உச்சியில் ஐந்து நட்சத்திர
கேளிக்கைக்காக
நீச்சல் குளத்தில் கொட்டிடும்
அவலம் தாங்காமல்
தண்ணீர் அழுவது யாருக்குத் தெரியும்?

○

காவிரி, பெண்ணை, பாலாறு இப்படி
தாய்நிலமெங்கும்
தன்முகம் பார்க்க முடியாமல்
கின்லே, அக்குவா, பாக்கெட் என
'அமரர்' ஆனதன் அடையாளமாக
'ஐஸ்' பெட்டிக்குள் இருப்பது கண்டு
தன் பிணம் பார்த்து தனியே உறைந்து
தண்ணீர் அழுவது யாருக்குத் தெரியும்?

செடியில் மழையாய்ச் சேர்ந்தபோது
உயிர்கள் அனைத்தும் மகிழ்ந்தன
கொடியில் சாரலாய்ச் சாய்ந்தபோது
உயிர்கள் அனைத்தும் ரசித்தன
நாற்றங்காலில் பாய்ந்தபோது
உலகம் பிழைத்தது
ஊற்று நீராய் ஒளிந்திருந்தாலும்
பூமி தழைத்தது
வெறும் பாட்டில் தண்ணி ஆனதனால்
பணம், காசுக்கு விலை போனதனால்
கைகழுவி விட்டனரோ? கையறுநிலைதானோ?
வெகுமக்கள் நிலை விளங்காமல்
தண்ணீர் அழுவது யாருக்குத் தெரியும்?

○

ஆறுகள், ஏரிகள், ஓடைகள் அனைத்திலும்
அந்நிய ஜாடைகள் கண்டு
அருவிகள் விழுவது தற்கொலையோ!
ஊர்கள்தோறும் நீர்நிலைகள்
தனியாராகும் கொடுமை தாங்காமல்
கடல் பொங்குவதுதான் விடையோ!
தண்ணீர் தேடி அலைபவர் விழிகளில்
தகிக்கிது நெருப்பு
நீரும் எரியும்... யாருக்குத் தெரியும்?

– துரை. சண்முகம்

படிப்பகம்